விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 கார்த்திகை 04 புதன்கிழமை (20.11.2002) தொலைபேசி- 2223378 ஒலி 336

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம் கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

### கண்காணிப்புக்குழு ஜெகனுடன் சந்தித்துப் பேச்சுவார்த்தை

# நெடுந்தீவில் இருந்து இன்று ஈ.பிடிபியினர் வெளியேறுவர்!

(நமது சிறப்பு நிருபர்)

**நெடுந்தீவில் கடந்த நான்கு தினங்களாக முகாமிட்டிருந்த ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் பொதுமக்களின் எதிர்ப்பு வலுவடைந்து வருவதை அடுத்து நெடுந்தீவில் இருந்து இன்று வெளியேறுவர் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.**

நெடுந்தீவில் மீண்டும் தமது முகாமை அமைக்கும் நோக்கத்துடன் ஈ.பி.டி.பி அமைப்பைச் சேர்ந்த யாழ் மாவட்ட அமைப்பாளர் ஜெகன் பிரதி அமைப்பாளர் நிசாந்தன் ஆகியோர் தலைமையில் 45 உறுப்பினர்கள் பொலிசாரின் உதவியுடன் கடந்த சனிக்கிழமை அதிகாலை வேளை நெடுந்தீவில் தரையிறங்கினர்.

ஈ.பி.டி.பியின் நெடுந்தீவுப் பிரவேசத்தை அடுத்து அங்கு ஏற்பட்ட முறுகல் நிலை கடந்த நான்கு தினங்களாக நீடித்தது.

இம் முறுகல் நிலையை அடுத்து மனித உரிமை ஆணைக்குழு உறுப்பினர்களும், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர்களும் நேற்றுக்காலை நெடுந்தீவுப்பகுதிக்குச் சென்றிருந்தனர்.

நெடுந்தீவு சென்ற மனித உரிமை ஆணைக்குழு உறுப்பினர்களும், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர்களும் அங்குள்ள பொது

(10ம் பக்கம் பார்க்க)

## கிழக்கின் பாதுகாப்பு உப குழு இன்று கூடுகிறது

(மட்டக்களப்பு)

உயர் பாதுகாப்பு வலயம் மற்றும் மீள் குடியேற்றம் தொடர்பான உப குழுவின் கிழக்கு மாகாணத்திற்கான முதலாவது கூட்டம் இன்று மட்டக்களப்பு மாவட்ட வவுணதீவு பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு அரச தரப்பில் ஒஸ்ரின் பெர்னாட்டோ தலைமையிலான குழுவும் விடுதலைப்புலிகளின் தரப்பில் கிழக்குத் தளபதி கேணல் கருணா அம்மான் தலைமையிலான ஒன்பது பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவர்களுடன் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக் கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட உயர் பாதுகாப்பு வலயங்கள் மற்றும் மீள்குடியேற்றங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளன. (த-5)

## நயினாதீவில் அரசியல் செயலகம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவில் நாளை வியாழக்கிழமை தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை செயலகம் ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது. (ம)

## ஈ.பி.டி.பி.யை வெளியேறக்கோரி இன்று காலை 10 மணி வரை கடையடைப்பு

### யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக்குச் சென்றுள்ள ஈ.பி.டி.பி அமைப்பினரை அங்கிருந்து உடனடியாக வெளியேறுமாறு கோரி அப்பகுதி மக்கள் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் எதிர்ப்புப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக இன்று காலை 10 மணி வரை குடாநாடு தழுவிய ரீதியில் கடையடைப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

இந்தக் கடையடைப்பு போராட்டம் தொடர்பாக நேற்றைய தினம் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் குடாநாட்டுப் பொது அமைப்புக்களுக்கான கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக் கூடத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

இன்று காலை 10 மணி வரை குடாநாட்டின் சகல வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருக்கும்.

(02ம் பக்கம் பார்க்க)

## தீவகத்தில் நேற்றும் வீதி மறிப்புப் போராட்டம்

(ஊர்காவற்துறை)

நெடுந்தீவிலிருந்து ஈ.பி.டி.பியினர் வெளியேற வேண்டுமெனக்கோரி அப்பகுதி மக்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டத்திற்கு ஆதரவளிக்கும் முகமாக நேற்றும் தீவுப் பகுதியில் பல இடங்களில் வீதி மறியல் போராட்டம் இடம் பெற்றுள்ளது.

சாவணைச் சந்தி, வேலணை துறையூர்ச் சந்தி ஆகிய இடங்களில் காலை 7 மணி முதல் மாலை 4.30 மணிவரை இவ் வீதி மறிப்புப் போரார் ட்டம் இடம்பெற்றது.

இப் போராட்டத்தில் வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது

(02ம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் பாதுகாப்புக்கு உதவ

உள்ளே --->
க.பொ.த (சா/தர) மாதிரி வினாத்

# இலங்கையின் பாதுகாப்புக்கு உதவ

# அமெரிக்கா - பிரிட்டன் முன்வருகை

## அமைச்சர் பீரிஸ் ராய்டருக்குப் பேட்டி




(நமது நிருபர்)

இலங்கையின் பாதுகாப்பு சம்பந்தமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தீவிர கவனம் செலுத்தி வருகிறார். இப் பாதுகாப்புக்கான உதவிகளை வழங்க அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடுகள் முன்வந்துள்ளதாகவும் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இம் மாதம் 25ந் திகதி நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு தொடர்பாக அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் ராய்டர் செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

(02ம் பக்கம் பாரக்க)

# கிழக்கில் முஸ்லிம் ஆயுதக்குழுக்கள்

# அரச சார்பற்ற அமைப்புக்கள் உதவி

## புலனாய்வுத்துறை அரசுக்கு அறிக்கை

(நமது நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் நான்கு முஸ்லிம் ஆயுதக்குழுக்கள் நடமாடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக தேசிய புலனாய்வுச் சபையும், குற்றப்புலனாய்வுப் பிரிவும் விரிவான அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்துள்ளன.

இந்த நான்கு ஆயுதக் குழுக்களும் வெளிநாடுகளில் பயிற்சி பெற்றுள்ளது என்றும் இக் குழுக்கள் வைத்திருக்கும் ஆயுத விபரங்கள் தொடர்பாக ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த ஆயுதக் குழுக்களுக்கு தற்போது அங்கத்தவர்கள் திரட்டப்பட்டு வருவதாகவும், இவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி ஆயுதப் பயிற்சி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகளுக்கு கொழும்பில்

(02ம் பக்கம் பார்க்க)

வீதி மறியல் போராட்டம் இடம் பெற்றுள்ளது.

சரவணைச் சந்தி, வேலணை பஸ் கொம்பனிச் சந்தி மற்றும்

உள்ளே --->
க.பொ.த (சா/தர) மாதிரி வினாத் தாள்>> கணிதம், விஞ்ஞானம்

# பாடசாலை அபிவிருத்திச் சபை மீண்டும் அமுல்படுத்தப்படும்

## கல்வி அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

பாடசாலை அபிவிருத்திச் சபைகளின் சட்டமூலம் அடுத்த வருடம் முதல் நடைமுறைப்படுத்தப்படும் எனவும், தரம் 1 இற்கு மாணவர்களை அனுமதிக்கும் பொறுப்பும் பாடசாலை அபிவிருத்திச் சபைகளிடம் ஒப்படைக்கப்படும் எனவும் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கல்வி அமைசசர் கருணாசேன கொடித்துவக்கு மேலும் தெரிவிக்கையில்,

கல்வி சம்பந்தமான முறைப்பாடுகளைப் பெற்றோர்கள் செய்வதற்கு

(02ம் பக்கம் பார்க்க)

## உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில்

# அரசு - புலிகளிடம் இருந்து உறுதிமொழி கோரப்படும்

(கொழும்பு)

எதிர்வரும் திங்கட்கிழமை நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் பங்குபற்றும் நாடுகள் தமிழீழ விடுதலைப்புலிகளிடமிருந்தும், அரசாங்கத்திடம் இருந்தும் உறுதிமொழியொன்றைக் கோரவிருக்கின்றன.

சமாதானப் பேச்சுவார்த்தையில் எவ்வாறான சிக்கல்கள் தோன்றினாலும், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வைக் காண்பதில் இருந்து பின் வாங்குவதில்லை என்ற உறுதிமொழியே கோரப்படவிருப்பதாக அரசாங்க வட்டாரங்கள்

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# உதவும் அனைத்து வழிமுறைகள் குறித்தும் ஆராய்ந்து அறிவோம்

## யாழ். வந்துள்ள பிரான்ஸ் பிரதித் தூதுவர்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அடுத்த வருடம் ஜனவரிமாதம்முதல் பிரான்சு மொழியை மாணவர்கள் கற்பதற்கான ஏற்பாடுகளை இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவராலயம்செய்துள்ளது.

நேற்றைய தினம் யாழ்ப் பாணத்துக்கு விஜயம் செய் திருந்த இலங்கை, மாலை தீவு நாடுகளுக்கான பிரான்ஸ் பிரதி தூதுவரான ஹால்டி மெஸ்ஸோனேவு யாழ் அரச செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வாறு தெரி வித்தார்.

யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து.வைத் திலிங்கம் தலைமையில் நடை பெற்ற இக்கூட்டத்தில் இந்தி யாவிலுள்ள பிரான்ஸ் தூது வராலயத்தின் அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான பிராந்திய ஆலோசகர் கியூபேட் டிமில்லி பிரான்ஸ் தூதுவராலயத்தின் கலாசார ஆலோசகர் ஜெக் கியூஸ் சாரியர், துணைவேந் தர் பேராசிரியர் பொ. பால சுந்தரம்பிள்ளை பிரதேச செயலர்கள் கலாசார உத்தி யோகத்தர்கள் ஆகியோர் பங்குகொண்டிருந்தனர்.

பிரதித் தூதுவர் ஹால்டி மொஸ்ஸோனேவு அங்கு மேலும் குறிப்பிடுகையில்;

யாழ்ப்பாணம்வாழ் மக் கள் பிரான்ஸ் மொழியைப் பயிலவசதியளிக்கும்பொருட்டு தூதுவராலயம் யாழ்ப்பா ணத்தில் மிகவிரைவில் அலயன் (ALLIANCE FRANCHISE) எனும் நிறுவனத்தினை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் மூலம் யாழ்ப்பாண மக்கள் பிரான்ஸ் நாட்டின் கலை கலாசாரங்களை அறிந்துகொள்வதற்கான ஏற் பாடுகளும் செய்யப்படும்.

அத்துடன் யுத்தத்தினால் அழிந்தநிலையிலுள்ள யாழ்ப் பாணத்தினை மீளக்கட்டி யெழுப்புவதற்கு எவ்வகையில் உதவ முடியுமோ அவைபற்றி அறியும் பொருட்டே வந்துள் ளோம் எனக் குறிப்பிட்டார்.

இக் கூட்டத்தில் யாழ் மாவட்ட மேலதிக அரச அதி பர் து.வைத்திலிங்கம் யாழ்ப் பாணத்து நிலைமைகள் பற் றியும் தற்போதைய தேவை கள் பற்றியும் எதிர்காலத்தில் செய்யப்பட வேண்டிய திட் டங்கள் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினார்.

இக்குழுவினர் நேற்றைய தினம் யாழ்ப்பாணபல்கலைக் கழகம், யாழ் பொது நூலகம் மற்றும் சாவகச்சேரிப்பகுதிக் கும் விஜயம் செய்தனர்.

அத்துடன் பிரான்ஸ் நாட் டைச் சேர்ந்த அரச சார் பற்ற நிறுவனமாகிய பட்டி னிக்கு எதிரான நிறுவனத் துடனும் இவர்கள் சந்திப்பை மேற்கொண்டிருந்தனர்.

(உ-77)

## இராசி பலன்

20.11 2002
(கார்த்திகை 4 புதன்)
பூரணை காலை 7 36 வரை
கார்த்திகை மு இ 8 26 வரை
இராகுகாலம் - 12 09-1 39
நல்ல நேரம் 4.39-6.09
அமிர்த சித்தம்
விநாயகர் விரதாரம்பம்

**மேஷம்**

தேவையற்ற விவாதம், பெரியோரால் வெறுப்படை தல், காரிய சித்தி, தனவிரயம்.

**இடபம்**

ஆழ்ந்த சிந்தை, போசன சுகம், முயற்சிகைகூடும், சிறு வியாதி.

**மிதுனம்**

பிரயாண அலைச்சல், உற வினர் மனஸ்தாபம், வாக்கு மேன்மை, முயற்சி பலிதம்.

**கடகம்**

எண்ணங்கள் நிறைவேற வாய்ப்புண்டு, பொருள் சேர்க்கை, சகோதரர் உதவி, கௌரவமான நிலை,

**சிங்கம்**

அதிகபிரயாசை, அதிகாரம், செய் தொழில் முன்னேற்றம், நல்ல செய்தி.

**கன்னி**

பிரயாணம், எதிர்பாராத நன்மை, நல்ல முயற்சி, மனச் சஞ்சலம்.

**துலாம்**

உறவினர் வெறுப்பு, காரிய தடங்கல், வாகன பயம், போசன சுகம்.

**விருச்சிகம்**

களஸ்திர சுகம், நண்பர்கள் சந்திப்பு, காரிய நன்மை, ரோக நிலை.

**தனுசு**

எடுத்த காரியம் கைகூடும், தொழில் விருத்தி, தேக ஆரோக்கியம், சத்துரு ஜெயம்.

**மகரம்**

பெரியோரால் மதிக்கப் படுதல், குடும்பக் கவலை, வியாபார நன்மை, உடல் நலக்குறைவு.

**கும்பம்**

நிலை மாற்றம், தாய்வழி உறவு, உடல் சோர்வு, வாகன சுகம்.

**மீனம்**

வாக்குப் பலிதம், அன்னி யர் உதவி, தனவரவு, முயற்சி தாமதம்.

(பழைய நேரப்படி கணிப் பிடப்பட்டது).

வளவன்

## ஸ்ரீ ஜெயவர்த்தன பல்கலையில் நிலவிய பதற்றம் நீங்கியது

(கொழும்பு)

கொழும்பு ஸ்ரீஜெயவர்த் தனபுர பல்கலைக்கழகத்தில் அண்மையில் இடம்பெற் றுள்ள அசம்பாவிதத்தைத் தொடர்ந்து நிலவியபதற்றம் நீங்கியுள்ளதுடன் பாது காப்பும் உறுதிப்படுத்தப்பட் டிருப்பதாக மேற்படி பல் கலைக்கழக துணைவேந்தர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகத்தை மீண் டும் திறப்பதற்கு முன்னர் விரிவுரையாளர்களிடம் இருந்து பீடாதிபதிகளிடம் இருந்து நிலைமைகள்தொடர் பான அறிக்கை பெற்றுக் கொள்ளப்படும் எனவும்தெரி வித்துள்ளார்.

(உ-10)

## மீளக் குடியமர்ந்த மக்கள் தொடர் மழையால் துன்பம்

(சண்டிலிப்பாய்)

வலிகாமம் தென்மேற்கு பிர தேச செயலர் பிரிவில் உள்ள சாவல்கட்டு, நவாலி, இள வாலை, மாதகல், சாந்தை போன்ற இடங்களில், வன்னி யில் இருந்து மீளக் குடியமர்ந் துள்ள மக்கள் தற்போது பெய்து வரும் மழை காரண மாக பெரும் அசௌகரியங் களை எதிர்நோக்குகின்றனர்.

மேற்படி மக்களின் வீடுகள் யுத்தத்தினால் சேதமடைந் துள்ளபோதிலும் அவை இன் னமும் புனரமைக்கப்படாமை யால் அவர்கள் மழை ஒழுக் கின் மத்தியில் துன்பப்படுகின் றனர்.

அத்துடன், குடிநீர் வசதி ஏற்படுத்தப்படாமையால் வயல் கிணறுகளிலேயே நீர் பெற்று வந்தனர்.

தற்போது பெய்து வரும் மழை காரணமாக வெள்ளத் தின் மத்தியிலேயே இவர்கள் குடிநீர் பெறச் செல்வதுடன்,

வயல் கிணறுகளில் தொப் பிக்கட்டு கட்டாமையால் அவற்றைப் பருகுவதால் தொற்றுநோய் அபாயத்தை யும் எதிர்கொண்டுள்ளனர்.

(உ-252)

## 14 வருடங்களின் பின்னர் காரைநகர் சுற்று வீதியை திறந்துவிட கடற்படை இணக்கம்

14வருடங்களின் பின்னர் காரைநகர் சுற்றுவீதி மக்கள் பாவனைக்காக டிசம்பர் முத லாம் திகதி திறந்துவிடப்பட வுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

காரைநகர் கடற்படைத் தளத்திற்கு அண்மையில் உள்ள காரைநகர் கிழக்குவீதி யையும் மேற்குவீதியையும் இணைக்கும்வீதியே இவ்வாறு மக்கள்பாவனைக்கு திறந்து விடப்படவுள்ளது.

அன்றைய தினமே வட பிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்களும் இச்சுற்று வீதியினூடாக சேவையை ஆரம்பிக்கவுள்ளதாகவும் காரைநகர் சாலைவட்டாரங் தெரிவித்துள்ளன.

இதுதொடர்பாக காரை நகர் கடற்படை அதிகாரிகள் காரைநகர் சாலை பொது முகாமையாளருடன் கலந் துரையாடியதுடன் சாலை முகாமையாளர் எல்.உருத்திர சுந்தரம் சாலைபொறியிய லாளர் உள்ளிட்டகுழு நே ரடியாக கடற்படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்று வீதியின் நிலைமை களைப் பார்வையிட்டுள்ளது.

போக்குவரத்து சேவை யை நடாத்தக் கூடியதாக நல்லநிலையில் வீதிஇருப்ப தாக அக்குழு தெரிவித்துள் ளது.

இச் சுற்று வீதியைமக்கள் பாவனைக்கு திறப்பதன்முன் னோடியாக மேற்குவீதியில் கடற்படைத்தள பிரதான வாசலிற்கு அருகே பயணிகள் சோதனைச் சாவடிகள் அமைத்துள்ள வீதியின் இரு மருங்குகளையும் கடற்படை யினர் துப்புரவு செய்துவரு வதை அவதானிக்க முடி கிறது

1988ம்ஆண்டு இராணுவ நடவடிக்கையின் போது படையினரால் மூடப்பட்ட இவ்வீதியினை திறப்பது தொடர்பாக கடந்தமாதம் காங்கேசன் துறையில் வட பகுதி கடற்படை அதிகாரிக ளுடன் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கலந்துரையாடியமை குறிப் பிடத்தக்கது.

(உ-246)

## தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பு நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்புநிதிக் கடன் திட்டத்தின்கீழ் கடன்கொடு நர்களுக்கான கடன் மீள ளிப்பு நாளை வியாழக் கிழமை முதல் எதிர்வரும் சனிக்கிழமைவரைஇடம்பெற வுள்ளது.

நாளை வியாழக்கிழமை வன்னிப்பகுதிக் கடன்கொடு நர்களுக்கான கடன்மீளளிப்பு பின்வரும் வருவாய்ப்பகுதி செயலகங்களில் இடம்பெறும்

முழங்காவில் காலை 9-00 மணி, இலுப்பைக்கடவை மு-ப 10-30 மணி ஆண்டான் குளம் நண்பகல் 12 மணி, மல்லாவி பி;ப4-30மணி.

நாளைமறுதினம் வெள்ளிக் கிழமை ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் காலை 8-30மணி, தண்ணீரூற்று மு.ப. 10 மணி புதுக்குடியிரு ப்பு மு:ப. 11 மணி விசுவமடு மு-ப11.45மணி கிளிநொச்சி மத்தியகல்லூரி பி.ப 2-30 மணி அதே வேளை யாழ் மாவட்டத்தில் வசிக் கின்ற கடன்கொடுநர் களுக்கான கடன் மீளளிப்பு எதிர்வரும்சனிக்கிழமை தற் போதுபளையில்அமைந்துள்ள வேம்பொடுகேணி அரசி னர்தமிழ்கலவன் பாடசாலை யில் காலை 9மணிதொ டக்கம் பிற்பகல் 2மணிவரை இடம்பெறவுள்ளது.

அத்துடன் கடன்மீளளிப் பைப்பெறவரும்குடாநாட்டு பொதுமக்கள் முகமாலையி லிருந்து பளைவரைக்கும் செல்வதற்கான போக்கு வரத்து ஒழுங்குகளை தமிழீழ மீட்புநிதிச் செயலகம் மேற் கொண்டுள்ளதாக நிதிப் பொறுப்பாளர் வே.தமிழ்க் குமரன் அறிவித்துள்ளார்

(த)

**தீவகத்தில்**

மக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

போராட்டத்தில் ஈடுபட் டோரை கலைந்துசெல்லு மாறுபொலிசார்வற்புறுத்திய போதும் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

இதேவேளை கலகம்அடக் கும் பொலிசார்ரோந்து நட வடிக்கையில் ஈடுபட்டிருந்த னர் போராட்டம் இன்றும் தொடர்ந்து நடைபெறவுள் ளது.

(த-75)

**ஈ. பி. டி, பியை**

- காலை 10-00 மணிவரை பாடசாலை மாணவர்களுக் கான போக்குவரத்துச்சேவை யைத் தவிர்ந்த ஏனைய அனைத்துப் போக்குவரத்துச் சேவைகளும் ஸ்தம்பிக்கப்ப டும்.
- அரச திணைக்களங்கள் மற்றும் கூட்டுறவுத்துறை நிறுவனங்கள் முழுநாளும் மூடப்பட்டிருக்கும்.
- பாடசாலைகள் மற் றும் கல்விநிறுவனங்கள்யாவும் வழமை போல் இயங்கும்
- ஈ. பி. டி. பியினர் இன் றைய தினத்திற்குள் நெடுந் தீவை விட்டு வெளியேற வேண்டும்; 31- 12- 2002 இற்கு முன்னர் குடாநாட்டை விட்டு முற்றுமுழுதாக வெளி யேறவேண்டும்.

அதேவேளை இன்றைய தினத்திற்குள் ஈ பி டி பி உறுப்பினர் நெடுந்தீவை விட்டு வெளியேறாவிடின் மேற்கொண்டு எடுக்கவேண் டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயும் பொருட்டு இன்று பி;ப 4 30மணிக்கு யாழ் பல் கலைக்கழக மாணவர்ஒன் றியத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் ஈ. பி. டி, பியினர் நெடுந் தீவைவிட்டு வெளியேறாத விடத்து அடுத்த கட்டமாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படவுள்ளதால் சகல பொது அமைப்புக்களினதும் தலைவர்கள், செயலாளர் களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு மாணவர்ஒன் றியம் கேட்டுள்ளது. (த)

**இலங்கையின்**

நோர்வேயில் நடைபெற வுள்ள நிதி உதவி வழங்கும் மாநாட்டில் கிடைக்கவுள்ள நிதி உதவிகளை விட, சமா தானப் பேச்சுவார்த்தைக்குக் கிடைக்கவுள்ள சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பே மிக முக்கியமானதாகும்

ஒஸ்லோ மாநாட்டின்மூலம் அரசாங்கம் நிதி உதவியை மாத்திரம் எதிர்பார்க்க வில்லை; இதற்குப் பதிலாக அரசின்சமாதானநடவடிக்கை களுக்கு சர்வதேச சமூகத்தின் ஒதுழைப்பையே அரசு எதிர் பார்க்கிறது.

தாய்லாந்தில் நடந்து முடிந்த சமாதானப் பேச்சு வார்த்தைக்குப் பின் விடுத லைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங் கத்துடன் அடிக்கடிதொடர்பு கொண்டு சமாதான முயற் சியை வலுப்படுத்திவருவதாக வும் அமைச்சர்பீரிஸ் அப்பேட் டியில் தெரிவித்துள்ளார்.

(ம)

**கிழக்கில்**

தலைமையகத்தைக் கொண்டி யங்கும் அரசசார்பற்ற நிறு வனங்கள் உதவி வருவதாக வும் இக்குழுக்கள் ஒசாமர், கிளக்ஹென்றி முஜாகுதீன் போன்ற அமைப்புகளின் கீழ் இயங்கி வருவதாகவும், இவை கல்முனை, சம்மாந்துறை, மூதூர் ஆகிய இடங்களில் தமது தலைமைக் காரியால யத்தை அமைத்துச் செயற் பட்டு வருவதாகவும், புல னாய்வு அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புலனாய்வுப் பிரிவினரால்அரசுக்குஅனுப்பி வைத்துள்ள இவ்விபரங்கள் அடங்கிய அறிக்கையை அமைச்சர் ரவூப்ஹக்கீம் மறுத்துள்ளார். (ம)

**பாடசாலை**

மேன்முறையீட்டு ஆணையா ளர் ஒருவர் நியமிக்கப்பட வுள்ளார். தற்போது நடை முறையில் உள்ள மேன்முறை யீட்டுச் சபைக்குப்பதிலாகவே மேன்முறையீட்டு ஆணையா ளர் நியமிக்கப்படவுள்ளார்.

இந்த மேன்முறையீட்டு ஆணையாளராக முன்னாள் பரீட்சை ஆணையாளர் ஏ. எம். ஆர்.பி. அமரக்கோன் நியமிக்கப்படுவார் என்றும் அமைச்சர் மேலும் தெரி வித்துள்ளார். (ம)

# நெடுந்தீவில் ஆயுதக்குழு சமாதானத்தைப் பாதிக்கும்

## இ. ச. பேரவை கண்டனம்

(யாழ்ப்பாணம்)

பல்நெடுங்காலமாக நாம் எதிர்பார்த்துக் காத்திருந்த சமாதான யுகம் மலரத் தொடங்கும் இவ்வேளையில் மக்களின் ஜனநாயகரீதியான போராட்டத்திற்கு மதிப்பளி யாது ஆயுதங்களுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை நெடுந் தீவில் அச்சுறுத்தல் மேற் கொண்ட தமிழ்க்குழுவினரின் நடவடிக்கை சமாதானத்தில் நம்பிக்கை கொண்டுள்ள எமக்கு பெரும் ஏமாற்றத் தையே தருகின்றது

இவ்வாறு இந்து சமயப் பேரவையின் செயலாளர் சி. சக்திகிரீவன் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

எம் மக்களுக்கு எதிராக ஆயுதங்களை ஏந்தும் இத்தகைய முயற்சிகளை மிக வன்மையாகக் கண்டிப் பதுடன் தொடர்ந்தும் இத்த கைய செயல்களில் ஈடுபட வேண்டாம் என்றும் பகிரங் கமாக கோருகின்றோம். (உ-5)

# பல்கலைக்கழக ஊழியர் சங்கம்

இம்மாதம் 16 ஆம் திகதி கடற்படை மற்றும்பொலிஸா ரின் பாதுகாப்புடன் நெடுந் தீவில் ஈ.பி.டி.பி உறுப்பினர் கள் தரையிறக்கப்பட்டமை யைத் தொடர்ந்து அத்தீவின் பதற்றநிலை அச்சமளிப்பதாய் உள்ளது.

1990 களில் பிரேமதாசா ஆட்சிக் காலத்தில் ஸ்ரீலங்கா வின் இராணுவ செயற்பாடு களுக்கு துணைபுரியும் பொருட்டே ஈ.பி.டி.பியினர் தீவகத்தில்தரையிறக்கப்பட் டனர்; அன்று தொட்டு இன்று வரை இவர்கள் அரசியல்கட்சி என்ற போர்வையில் ஆயுதக் குழுவாகவே தொழிற்படுகின் றனர்.

பொதுஜன முன்னணி ஆட் சிக்காலத்தில் தீவகத்தில் இவர் களின் அடாவடித்தனங்கள் மேலும் அதிகரித்தன.

இவர்களை வெளியேற்ற தகுந்தவொரு சந்தர்ப்பத்துக் காக காத்திருந்த நெடுந்தீவு மக்கள் தம் இயல்பு வாழ்க்கை மீளத்திரும்புவதற் கேற்றபுறச் சூழல் உருவாகி வரும் நிலை யில் அத்தகைய உருவாக்கத் துக்கு குந்தகமான இந்த ஆயு தக் குழுவினரை தமதுபிரதே சத்தை விட்டு விரட்டியடித்த னர்.

தற்போது மக்களின் விருப் பத்துக்கு மாறாக இரவோடு இரவாக ஆயுதங்கள் சகிதம் அரச படைகளின் துணை யோடு ஈ.பி.டி.பியினரை மீண்டும் நெடுந்தீவில் தரை யிறக்கியுள்ள செயலுக்குசமா தான முயற்சிகளை குலைக்க விரும்பும் பேரினவாதிகளின் பின்னணி உண்டு என்பது வெளிப்படையானது.

இச் செயல் நெடுந்தீவின் இயல்பு நிலையை உடனடியா கவே பாதித்துள்ளது. பொலி ஸாரின் தாக்குதலில் மூன்று பொதுமக்கள் காயமடைந் துள்ளதாக தகவல்கள் கிடைத் துள்ளன தீவகத்தின் ஏனைய பகுதிகளிலும் பதற்றமான சூழல் உருவாகியுள்ளது. மக் கள் கொந்தளிப்பான நிலை யிலுள்ளனர்.

இவையெல்லாம் இந்நாட் டில் பல ஆண்டுகளுக்கு பிறகு உருவாகியுள்ள சமாதான நல் லெண்ண சூழலுக்கு பாரிய சேதத்தை உருவாக்கக் கூடி யவை. ஈ.பி.டி.பியினரை தரை யிறக்கிய காரணமானவர் களின் நோக்கமும் அதுவே யாகும்.

தயவு செய்து இவ்விடயத் தில் தாங்கள் உடனடியாக தலையிட்டு ஈ.பி.டி பியினரை அவர்களின் ஆயுதம் சகிதம் உடனடியாக அவ்விடத்தை விட்டு வெளியேற்றுமாறு சமா தானத்தின் பேரில் எமக்குள்ள அக்கறையின் நிமித்தம் பணி வாக வேண்டுகிறோம்.

# பொது அமைப்புகள் பலவும்

## க. கா. குழுவுக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் ஈ. பி. டி. பி யினரும் கடற்படை மற்றும் பொலிஸாரும் இணைந்து மேற்கொள்ளும் மக்கள் விரோதச்செயல்களைதடுத்து நிறுத்தும் வகையிலும் அங்கு நிலைகொள்ள முயலும் ஈ.பி. டி.பியினரின் முயற்சியை தடுத்து நிறுத்தக் கோரியும் பல்வேறு பொது அமைப்புக் களும் நேற்றைய தினம்யாழ். மாவட்டக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் மகஜர்க ளைக் கையளித்துள்ளன.

முன்னதாக காலை 9.45 மணியளவில் சர்வதேச தமி ழ் மாணவர் பேரவை அலு வலகத்தில் ஒன்றுகூடியபொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஒன்றிணைந்து கண்காணிப் புக்குழு அலுவலகத்திற்குச் சென்று மேற்படி மகஜர் களைக் கையளித்துள்ளனர்.

கையளித்த மகஜர்களின் விபரம் வருமாறு,

# இயல்பு வாழ்விற்குசகலரும் ஒத்துழைக்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

''புரிந்துணர்வு அடிப்படை யில் சமாதானத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் மிகமுன் னேற்றமான முறையிலேநடை பெற்றுக் கொண்டிருக்கும் இந்த வேளையில், நெடுந் தீவில் நடைபெறும் சம்பவங் கள் மக்களிடையே அச்சத்தி னையும் திகிலையும் ஏற்படுத் துகின்றன.

இவ்வாறு யாழ். மாவட்டக் கல்வி மேம்பாட்டுக்கழகத் தலைவர் பேராசிரியர் அ,சண் முகதாஸ் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

அச்செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப் பதாவது;

மக்கள் சமாதான முயற்சிக ளூடாகத் தம்முடைய இயல்பு வாழ்வு திருப்பிவிடுமென்றும்; மாணவர் குழாத்தினர் தம் முடைய கல்வி இடையூறின்றி தொடரப்போகின்றது என் றும் எண்ணுகின்ற வேளை யில் ஈ. பி டி. பியினர் நெடுந் தீவுப் பகுதியில்வந்துஇறங்கியி ருப்பதும், அதைத்தொடர்ந்து ஏற்பட்டுவரும் நிகழ்வுகளும் சமாதான முயற்சிகளைக் குழப்பிவிடுமோ என ஐயப் படவைக்கின்றன.

நெடுந்தீவு மக்கள்மீது வன் முறைகளைக் கட்டவிழ்த்து விடுவதைத் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை வன் மையாகக் கண்டிப்பதுடன், மக்கள் சமாதானமுடனும் மகிழ்வுடனும் இயல்பு வாழ் வினைப்பெற எல்லோருடைய ஒத்துழைப்பினையும் வேண்டி நிற்கிறது என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ந)

# பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கு முன்னர் கடற்படையின் ஆதரவுடன் யாழ். குடாநாட்டில் குறிப் பாக தீவகத்தில் ஈ.பி.டி.பி யினர் சர்வாதிகார ஆட்சி நடத்திவந்தனர்.

பழிவாங்கப்படலாம் என்ற பயத்தில் அவர்களின் அடா வடிகளைப் பொறுத்துவந்த மக்கள் தற்போதைய அமைதி நிலையைப் பயன்படுத்தி அவர்களை துரத்தியடித்து பாடம்புகட்ட முயன்றுள்ள னர்.

மக்களைப் பழிவாங்கும் நோக்கிலேயே ஈ.பி.டி.பி நெடுந்தீவில் இறங்கியுள்ளது.

அவர்களிடமுள்ள ஆயுதங் களைக் களைவதற்குப்பதி லாக பொலிஸார் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கியுள்ளது டன், பொதுமக்கள் மீதும் கண்ணீர்ப்புகைக் குண்டு களை வீசியுள்ளனர்.

இச்சம்பவமானது பொது மக்களை ஆத்திரமூட்டியுள் ளது.

இவற்றைக் கருத்தில் கொண்டு ஈ.பி.டி.பி உறுப் பினர்களை வெளியேற்றி அங்கு ஏற்பட்டுள்ள அமைதி யின்மையை போக்குப்படி கேட்டுக்கொள்கின்றோம்.

# யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம்

நெடுந்தீவின் இயல்புவாழ்க் கையைச் சீர்குலைக்கும் வகை யில் ஈ.பி.டி.பி செயற் படு கின்றது;

இது சமாதான உடன் படிக்கையின் 18ஆம் பிரிவு ஆயுதப்பாவனை நிலைமைக் குச் சவாலாக அமைத்துள் ளது,

இதுவிடயத்தால் உடன் படிக்கை முறிவடையுமானால் நெடுந்தீவு மக்கள் அதனை எதிர்கொள்ள மிகவும் அஞ்சு கின்றனர்.

இதுகுறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்கும் ஏற்கனவே கொண்டுவரப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட தரப்புகளு டன் தொடர்பு கொண்டு எமதுமனிதாபிமானப் பிரச்சி னைக்கு நல்ல முடிவைக் காண்பீர்கள் என நம்புகின் றோம். (உ-16,7)

# யாழ். நூலகத்திற்கு அமெரிக்க நிறுவனம் தொழில்நுட்ப உதவி

(யாழ்ப்பாணம்)

புனரமைக்கப்படும் யாழ்ப் பாண பொதுசன நூலகத் திற்கு அமெரிக்க போர்ட் பவுண்டேசன் நிறுவனம், யுனெஸ்கோ நிறுவனம் மூல மாக நூல்கள், பருவவெளியீடு கள், தொழில் நுட்பஉதவிகள் வழங்கவுள்ளது.

இந்த வகையில், நூலகத் துக்கு வழங்கக் கூடிய நூல்கள் பருவ வெளியீடுகள் பற்றிய விபரங்களை வாசகர்கள், அறிஞர்கள், கல்விமான்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் ஆகியோரிடமிருந்து எதிர் பார்ப்பதாகவும்,

நூற்பட்டியல்களை இயன் றளவு விரைவாக தந்துதவு மாறும் யாழ்ப்பாண பொது சன நூலகத்தின் பிரதமர் நூல கர் ச தனபாலசிங்கம் கேட் டுள்ளார்;

இதே வேளை, யாழ். நூல கத்திற்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை யும், குடாநாட்டு மக்கள் அனைவரும் நூலகத்தால் பயன் பெறத்தக்கதான நட மாடும் நூலக வசதியையும் ஏற்படுத்த யுனெஸ்கோ நிறு வனம் 2 இலட்சம் அமெரிக்க டொலர்களை வழங்கத் தீர் மானித்திருப்பது குறிப்பிடத் தக்கது. (உ-9)

### புலிகளின் குரல் வானொலியின்

# 12வது ஆண்டு நிறைவு விழா இன்று கிளிநொச்சியில்

(யாழ்ப்பாணம்)

புலிகளின் குரல் வானொலி யின் 12 ஆம் ஆண்டு நிறைவு விழாவும், வானோசை12கலை இலக்கியப்போட்டிக்கானசான் றிதழ்வழங்கலும்இன்று புதன் கிழமை பி.ப 4 மணிக்கு கிளி நொச்சி மத்திய மைதானத் தில் நடைபெறவுள்ளது.

புலிகளின் குரல் வானொலி பொறுப்பாளர் நா. தமிழன் பன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது;

ஈகச்சுடரேற்றல், தேசிய கொடியேற்றல், அமைதி வணக்கம், மங்களஇசை, மா வீரர்வணக்கநடனம்வர வேற் புரை, தலைமையுரை, சிறப் புரை என்பனவற்றைத் தொடர்ந்து இசையமைப்பா ளர் போராளி செயல் வீர னின் பின்னணி இசையில் 'இன்னிசை விருந்தும் இடம் பெறவுள்ளது. (உ-10)

# கால்நடைகளால் கமக்காரருக்கு இடையூறு

(காரைநகர்)

காரைநகர் விவசாயிகளுக்கு அப்பகுதிக் கால்நடைகள் பெரும் அச்சுறுத்தலாக இருந்து வருவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது;

தமது கால்நடைகளைக் கட்டி வளர்க்கத் தவறுபவர் களாலேயே இந்நிலைமை ஏற் படுவதாகவும் சுட்டிக்காட் டப்படுகிறது;

இதேவேளை, கடற்படை யின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள கால்நடைகளும் இரவு வேளைகளில் பயிர்களை நாசப்படுத்தி வருவதாக வும்

இது குறித்து கடற்படை யினருடன் கலந்துரையாடி ஏற்ற நடவடிக்கை எடுக்க விருப்பதாகவும் சம்பந்தப் பட்ட விவசாய சம்மேளனம் தெரிவித்துள்ளது.

(உ-249)

### பல்கலை மாணவன் படுகொலை

# தேடப்பட்ட சகபாடி பொலிஸில் சரண்

(கொழும்பு)

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவன் படுகொலை தொடர்பாக தேடப்பட்டு வந்த மற்றொரு மாணவன் நேற்று முன்தினம் மிருகான பொலிஸ் நிலையத் தில் சரணடைந்துள்ளார்.

இப்படுகொலை தொடர் பாக இதுவரை 29 பல்கலை மாணவர்கள் கைது செய்யப் பட்டு விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக மேலும் பல மாணவர்களையும், மாணவ கோஷ்டி மோதலை தூண்டிவிட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படுவோரையும் பொலிஸார் தொடர்ந்தும் தேடிவருகின்றனர்.

(உ-8)

### சாரதி அனுமதிப்

# பத்திரம்

### மீளப் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

அண்மைக் காலத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றும், அதனைத் தொலைத்தவர்கள் எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னதாக தத்தம் கிராம அலுவலர் ஊடாக அதனை மீளப்பெற விண்ணப்பிக்கு மாறு மேலதிக அரசாங்க அதி பர் து.வைத்திலிங்கம் கேட் டுள்ளார். (உ-7)

# வேலைத்திட்டத்தை துரிதப்படுத்துக

(கோப்பாய்

யாழ் வலயப் பாடசாலை களில் ஜி ரி சற் நிறுவனம் மேற்கொண்டுவரும் வேலைத் திட்டங்களைத் துரிதப்படுத்து மாறு, சம்பந்தப்பட்ட பாட சாலைகளின் அதிபர்களை யாழ். மேலதிக கல்வி வலயப் பொறியியலாளர் ஜி. சிவ பாலன் கேட்டுள்ளார்.

(உ-79)

### திருவெம்பாவை

# ஓதுதல் போட்டி

(மந்திகை)

வல்லிபுர ஆழ்வார் ஆலய அறங்காவலர் சபையினர்-மார்கழி நோன்பையொட்டி மாணவர்களுக்கான 'திரு வெம்பாவை ஓதுதல்' போட் டியை நடத்தவுள்ளனர்.

இப்போட்டியில் 6,7 ஆம் தரங்களைச் சேர்ந்த மாண வர்கள் கீழ்ப்பிரிவிலும் 8,9 ஆம் தர மாணவர்கள் மத்திய பிரிவிலும் 10, 11 ஆம் தர மாணவர்கள் மேற்பிரிவிலும் தோற்றலாம்;

விரும்புவோர் பாடசாலை அதிபர் அல்லது வகுப்பாசிரி யர் ஒருவரால் சிபார்சு செய் யப்பட்ட விண்ணப்பத்தினை அடுத்த மாதம் 18 ஆம் திக திக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறங்காவலர் சபை செயலாளர் கேட்டுள் ளார்; (உ-22)

# படகு கடலில் மூழ்கியது

(மந்திகை)

பொலிகண்டிப் பகுதியில் கடற்றொழிலிற்கு சென்ற றோலர் படகு கடல் கொந் தளிப்பினால் முருகைக் கல்லு டன் மோதுண்டு மூழ்கியுள் ளது.

நேற்று முன்தினம் அதி காலை இச்சம்பவம் நடை பெற்றுள்ளது;

மூழ்கிய படகினை மீட்கும் பணியில் கடற்றொழிலாளர் ஈடுபட்டுள்ளனர். (உ-28)

# விவசாய அபிவிருத்திக் குழுக் கூட்டம்

(மந்திகை)

யாழ். மாவட்ட விவசாய அபிவிருத்திக் குழுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை பி.ப 2மணிக்கு மாவட்ட செயலகத் தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் விவசாய அபிவிருத்தி தொடர்பாகவும் அரச சார்பற்ற நிறுவனங் களின் உதவியை பெறுவது தொடர்பாகவும் ஆராயப்பட வுள்ளது. (உ- 23)

# கண்ணிவெடியில் பஸ் சிக்கியது 25 பயணிகள் பலி: 15 பேர் காயம்

## ஆந்திராவில் சம்பவம்

(ஹைதராபாத்)

ஆந்திரப்பிரதேசத்தின் காட்டுப் பகுதியான பரங்கு மாவட்டத்தில் பயணிகள் பஸ் ஒன்று கண்ணி வெடியில் சிக்கியதில் குறைந்தது 25 பேர் பலியானதுடன் 15 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

மாவோ தீவிரவாதிகளால் புதைக் கப்பட்ட கண்ணிவெடியிலேயே இந்த பஸ் சிக்குண்டு வெடித்ததா கப் பொலிஸார் தெரிவித்தனர்.

இத்தகைய பயங்கரவாதச் செயல் களில் ஈடுபட்டு வருவதாகக் கூறப படும் மக்கள் போராட்ட அமைப் பின் உறுப்பினர்களை கைது செய் வதற்கான நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாக ஆந்திரப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இப்போராளிகள் 1989 ஆம் ஆண்டு தொடக்கம் இந்தியாவின் 5மாநிலங்களில் இயங்கி வருவ தாகக் கூறப்படுகின்றது. (பி-4)

# நாகப்பா மீட்பு தொடர்பாக கர்நாடக அமைச்சர்கள் ஜெயலலிதாவுடன் ஆலோசனை

(சென்னை)

நாகப்பாவை மீட்பது குறித்து தமிழக முதல்வருடன் கர்நாடக அமைச்சர்கள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்கள்.

கர்நாடக முன்னாள் அமைச் சர் நாகப்பா வீரப்பனால் கடத்தப பட்டு 87 நாட்கள் கடந்த பின்ன ரும் அவரை மீட்கும் முயற் சியில் எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லை.

இது சம்பந்தமாக தமிழக முதல்வர் வெளியிட்டுள்ள அறிக் கையில நாகப்பாவை மீட்க தமி ழகத்திலிருந்து தூதுவர்கள் எவ ரையும் அனுப்பமுடியாது. வீரப் பனை பிடிப்பதற்காக தமிழக அரசு பூரண ஆதரவு மட்டும் வழங்கும் என்றும் குறிப்பிடப பட்டுள்ளது. (பி-4)

# அமைச்சர் திருநாவுக்கரசு வை.கோ.வை சந்தித்தார்

(சென்னை)

மத்திய கப்பல்துறை இணை யமைச்சர் திருநாவுக்கரசு கடந்த செவ்வாய்க்கிழமை வேலூர் சிறை யில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக கழகப் பொதுச்செயலர் வை.கோ வை சந்தித்துள்ளார்.

வை.கோ உச்ச நீதிமன்றத் தில் வழக்குத் தொடர்ந்துள்ளமை பற்றி அமைச்சர் குறிப்பிட்ட போது பொடோ சட்டத்தினால் பாதிக் கப்பட்டவர் என்ற அடிப்படையில் தான் அவர் வழக்குத் தொடர்ந் துள்ளதாகக் கூறினார்.

மத்திய அரசு என்ன நோக் கத்திற்காக இச்சட்டத்தைக் கொண்டு வந்ததோ அதே நோக் கத்திற்காக மட்டுமே அதனைப் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

பொடோ சட்டத்தில் உள்ள 21 ஆவது பிரிவை நீக்குமாறு கோரி ம.தி.மு.க பொதுச் செய லர் வை.கோ. கடந்தவாரம் வழக்கு தாக்கல் செய்துள்ளமையும் இங்கு குறிபபிடத்தக்கது. (பி-4)




# அணு ஆயுத திட்டத்தைக் கைவிட்டால் வடகொரியாவுக்கு பாரிய உதவி

## அமெரிக்க வெளியுறவு அமைச்சர் உறுதி

(நியூயோர்க்)

அணு ஆயுதத் திட்டங்களை யும் உலக நாடுகளின் ஸ்திரநி லைக்கு குந்தகம் விளைவிக்கும் பாரிய திட்டங்களையும் வட கொரியா கைவிட்டால் அந்த நாட் டிற்கு பல உதவிகளை வழங்க அமெரிக்கா தயாராக இருக்கிறது என்று அமெரிக்க ராஜாங்க அமைச் சர் கொலின் பவல் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

அவரது இந்தக்கூற்று வட கொரியாவுக்கு அரசியல் மற்றும் பொருளாதார ரீதியிலான உதவி களையே குறிக்கிறது என்று அமெரிக்க ஆய்வாளர்கள் தெரி வித்துள்ளனர்.

இதேவேளை அமெரிக்கா ஈராக் நிலைப்பாட்டைப் போல வடகொரியாவை அச்சுறுத்த வில்லை என்பது குறிப்பிடத்தக்க விடயமே. (பி-2)

# ஈராக்கில் நுண்ணுயிர் ஆயுதம் அமெரிக்கா எச்சரிக்கை!

(வாஷிங்டன்)

சின்னம்மை நோயைப் பரவச் செய்யும் நுண்ணுயிரியல் ஆயுதங் களை ஈராக் தயாரித்திருக்கலாம் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இதன் காரணமாக சின்னம்மை நோயைத் தடுப்பதற்கான மருந் துகளை ஊசி மூலம் அமெரிக்கர் களுக்குச் செலுத்த வேண்டியேற் படும் என அமெரிக்க விஞ்ஞானி ஒருவர் கூறியுள்ளார்.

அமெரிக்க நுண்ணுயிரியல் சங்கத்தலைவரான றொபேட் அலீஸ், றௌலி ஹாயில் நடை பெறும் 4 நாள் கருத்தரங்கில் உரையாற்றும் போது இதனைத் தெரிவித்துள்ளார். (பி-4)

# தீவிரவாதியின் மரணத்துக்கு பழிவாங்குவார்களாம்!

## அமெரிக்கா மீது பாகிஸ்தானியர் ஆத்திரம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் தீவிரவாதி ஒருவ ருக்கு விஷ ஊசி மூலம் மரண தண்டனை விதித்தமைக்காக அமெரிக்கா மீது பழிவாங்கப் போவதாக பாகிஸ்தானியர்கள் பலபேர் சூளுரைத்துள்ளனர்.

அமெரிக்க மத்திய புல னாய் வுப் பிரிவினர் இருவரைக் கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் பாகிஸ்தானைச் சேர்ந்த ஐமல் ஹான் ஹான்சிக்கு விஷ ஊசி ஏற்றி மரணதண்டனை நிறை வேற்றியதற்காக அமெரிக்காவை பழிவாங்கப் போவதாக பாகிஸ் தான் விமான நிலையத்தில் கூடியிருந்த பெருந்திரளான மக்கள் கோசம் எழுப்பி ஆரவாரம் செய்துள்ளனர்.

ஐமல் ஹான் ஹான்சியின் உடல் நேற்று பாகிஸ்தானுக்கு எடுதது வரப்பட்டவேளை, பாகிஸ தான் விமான நிலையத்தில் பெருந்திரளான மக்கள் கூடி யிருந்தனர். அவர்கள் தமது கை ளில் ''ஐமல் ஹான் ஹான்சி ஒரு தியாகி'' என்று வசனம் எழுதபபட்ட பதாதைகளைத் தாங்கிய வண் ணம் ''அமெரிக்காவைப் பழி வாங்குவோம்'' என்று பலத்த கோசங்களை எழுப்பினார்கள். அத்துடன் 700 இற்கும் மேற்பட்ட வாகனங்களின் ஊர்வலத்துடன் ஹான்சியின் உடலை அவரது இல்லத்திற்கு எடுத்துச் சென்றனர்.


அங்கு பெருந்திரளான மக் கள் கூடி நின்று அமெரிக்கா எதிராகக் கோஷம் எழுப்பிய வண்ணம் இருந்தனர் என்று அங் கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, ஹான்சியின் உட லை அமெரிக்காவிலிருந்து பாகிஸ தானுக்கு எடுத்து வந்த அவரது சகோதரர் விமான நிலையத்தில் வைத்து செய்தியாளர்களிடம் பேசுகையில தனது தம்பி உறுதி யான மனிதனாக மரணமடைந்துள் ளான் என்றும் அவனுக்கு அமெ ரிக்காவினால் நிறைவேற்றப் பட்ட மரண தண்டனை அமெரிக்கா மீதான வெறுப்பை மேலும் அதி கரித்துள்ளது என்றும் தெரிவித் துளளார்.

இதையடுத்து தீவிரவாதிக ளின் தாக்குதலிற்கு அமெரிக்கா இலக்காகலாம் என்பதால் எச் சரிக்கையாக இருக்கும்படி அங் குள்ள தமது நாட்டுமக்களுக்கு அமெரிக்க அதிகாரிகள் வேண்டு கோள் விடுத்துள்ளனர் என்றும் மேலதிக தகவல்கள் தெரிவிக் கின்றன. (பி-2)

# முத்தமிழறிவும் ஒருங்கே அமைந்த ஆசான் இ.மா. சிவசுப்பிரமணியம்

## ஆசிரியப்பணியில் இன்று ஓய்வு பெறுகிறார்



பண்பாட்டு விழுமியங்களை வழுவாது பேணுவதில் தீவகத் திற்குத் தனிப்பெருமை உண்டு. உறவுகளை ஊரவர்களை நேசிப் பதிலும் சமூகக் கடமைகளை நிறைவேற்றுவதிலும் தீவக மக்கள தமக்கு நிகர் தாமே என்னும் பெருமைக்குரியவர்கள்.

அத்தகைய பெருமைக்குரிய தீவகத்தின் சரவணைப்பதியில் பிறந்தவர் ஆசிரியப் பெருந்தகை இ.மா.சிவசுப்பிரமணியம் அவர் கள்.

சரவணப் பொய்கையில் தோன்றிய சிவசுப்பிரமணியப் பெருமான் தமிழ்க்கடவுளாகப் போற்றிப் புகழப்பட்டார். அவரது நாமத்தோடு சரவணை மேற்குப பதியில் பிறந்த இ.மா. சிவசுப் பிரமணியம் அவர்களும் பெரு மைக்குரிய தமிழாசானாகப் போற்றப்படுகிறார்.

இ.மா.சி என்று அனைவராலும் அன்பாக அழைக்கப்படும் ஆசிரியர் அவர்கள், இன்று வைரம் பாய்ச்சிய அகவை அறுபதை அடையும் போது அவரின் ஆசிரியப்பணிகளை மீட்பது சால வும் பொருத்தமுடையதாக அமை யும்.

1942ம் ஆண்டு சரவணை மேற் கில் பிறந்த இ.மா.சி அவர்கள் தனது ஆரம்பக்கல்வியை சர வணை நாகேஸ்வரி வித்தியால யத்திலும், இடைநிலைக்கல்வியை வேலணை சோ வைத்தியலிங்கம் துரைச்சாமி ம.ம வித்தியாலயத்திலும் கற்றார்.

### சிரபுரத்தோன்

தனது சொந்த முயற்சியினா லும், ஊக்கத்தினாலும் பல் கலைக்கழகத்திற்குச் சென்றார். பல்கலைக்கழகக்கல்வியில் பெரு மளவு தீவகமாணவர்கள் காலடி வைத்த காலப்பகுதி அது. அக் காலப்பகுதியில் பல்கலைக்கழக அனுமதியை திரு.இ.மா.சி அவர் கள் பெற்றுக் கொண்டதால், தனது ஊரிலும், தான் கற்ற வேலணை சேர் வைத்திய லிங்கம் துரைச்சாமி ம.ம வித்தி யாலயத்திலும் இருந்து பல் கலைக்கழகத்திற்குச் சென்ற முதல் மாணாக்கர்கள் என்ற பெயர்ப்பட்டியலில் தனது பெய ரையும் பதித்துக் கொண்டார்.

பேராதனைப் பல்கலைக் கழ கத்தில் பேராசிரியர் சு. வித்தியா னந்தன், பேராசிரியர் கைலாச பதி, பேராசிரியர் க.கணபதிப் பிள்ளை ஆகியோரிடம் தமிழூக் கம் பெற்றமையால் முத்தமிழறி வும் இ.மா.சி அவர்களிடம் குடி கொண்டது.

பேசுவதிலும், பண்ணோடு பாடுவதிலும் திறன் மிகுந்த ஆசிரியர் அவர்கள் தனது பட் டப்படிப்பை நிறைவு செய்த கை யோடு 1971 முதல் 1976 வரை மூதூர் ப.நோ.கூ.சங்கத்தின் பொது முகாமையாளராகப் பணியாற்றி னார்.

தான் பெற்ற தமிழறிவு பிற ருக்குப் பயன்படவேண்டுமென்ற பெரு நோக்கோடு1976 ஆம் ஆண்டு ஆசிரிய சேவையில இணைந்தார். மூதூர் மல்லிகைத் தீவு மகாவித்தியாலயத்தில் தனது ஆசிரியப்பணியை ஆரம்பித்த இ.மா.சி அவர்கள் 1986 ஆம் ஆண்டில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியப்பணியைத் தொடர்ந்து இன்று ஓய்வுபெறும் நாள்வரை அக்கல்லூரியில தனது பணியைத் திறம்பட ஆற்றினார்.

கொக்குவில் இந்துக் கல்லூரி யில் அவரிடம் தமிழ் கற்ற மாணவர்கள் இன்று சிறந்த தமி ழாசிரியர்களாக, பல்கலைக்கழக விரிவுரையாளர்களாக இருப்பது அவரின் ஆசிரியப்பணியின் நிறை யிடலுக்குத் தகுந்த சான்றாக அமைந்துள்ளது.

தமிழ்மொழித் திறனும், தமிழ்க கலாசாரமும் அவரோகணப்பா தையை எட்டிப் பார்க்கும் இன் றைய சூழ்நிலையில் தமிழாற்றல் மிக்க ஆசான் இ.மா.சிவசுப் பிரமணியம் அவர்களின் ஓய்வு வருங்கால மாணவர்களுக்கு அவரிடம் கற்கும் வாய்ப்பை இழக்கச் செய்துள்ளதாயினும், அவரின் ஆசிரியப்பணி, ஓய்வு காலத்திலும் தொடரவும், அவரின் உடல் ஆரோக்கியம் குன்றாதி ருக்கவும் ஓய்வு காலம் சிறப்பாக அமையவும் குன்றழந்த குமரப் பெருமானைத் துதிக்கின்றோம்.

# இருதரப்பு பேச்சுவார்த்தை சூடானில் முறிவடையும் நிலை

(கார்ட்டூம்)

சூடான் அரசிற்கும் சூடான் மக்கள் விடுதலை இரா ணுவத்தி னருக்கும் இடையில் கென்யாவில் நடைபெற்று வரும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடை யும் நிலை ஏற்பட்டுள்ளது.

இருதரப்பினருக்கும் இடை யில் கடந்த சனிக்கிழமை கென் யாவில் இடம்பெற்ற பேச்சுவார்த் தையின் போது ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவது தொடர்பாக ஆராயப்பட்டது. எனினும் அந்த ஒப்பந்தத்திற்கு தீவிரவாத அமைப்பான மக்கள் விடுதலை ராணுவம் சம்மதம் தெரிவித்திருந்த போதும் சூடான் அரசு மறுத்து விட்டது.

இதன் காரணமாக இரு தரப் பினருக்கும் இடையிலான சமாதா னப் பேச்சுவார்த்தை முறிவடை யும் சூழ் நிலை தோன்றிவிடலாம் என்றும், இதனால் இன்றைய தினத்திற்குள் இருதரப்பும் இணக் கம் காணவேண்டும் என்றும் மத்தியஸ்தம் வகித்த கென்யத் தலைவர் கோரிக்கை விடுத்துள் ளார். (பி-2)

# நேருக்கு நேர் பஸ்கள் மோதியதில் 27 பேர் மரணம் 70 பேருக்குகாயம்

(பிறேஸிலியா)

பிறேஸில் நாட்டின் அனைக் காஞ்சியாப் பகுதியில் நேற்றுக் காலை இரண்டு பஸ்கள் நேரு க்கு நேராக மோதியதில் 27 பேர் மரணமானதாகவும் 70பேர் காயமடைந்ததாகவும் என்று பிறே சில் பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

இதேவேளை, இந்த இரண்டு பஸ்ஸிலும் நூற்றுக்கு மேற்பட்ட பயணிகள பயணம் செய்துள்ளார் கள் என்றும் விபத்து இடம் பெற்ற வேளை அந்த இடததி லேயே பலர் உயிரிழந்ததுடன் சிலர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார்கள் எனவும் தெரி விக்கப்படுகிறது. காயமடைந்த வர்கள் பலரின் நிலை கவலைக் கிடமாக இருப்பதாகவும் தெரி விக்கப்படுகிறது.

இந்த பஸ் விபத்து எவ்வாறு இடம் பெற்றது என்று பிறேஸில் பொலி ஸார் விசாரணைகள் மேற் கொண்டு வருகின்ற போதிலும் விபத்துக்கான காரணம் இது வரை தெரியுவரவில்லை. (பி-4)

# இன்று ஒரு தகவல்

## இசையும் மருத்துவமும்

இசையே ஒரு மருந்து என்று சொன்னால் நீங்கள் நம்புவீர்களா? நம்பமாட்டீர்கள்... சொல்லுகிறவர்களை சந்தேகமாகப் பார்ப்பீர்கள்!. இசை விருந்து என்று சொல்லுவது தான் நமது பழக்கம். இசை மருந்து என்று சொன்னாலும் அதில் ஒன்றும் தப்பு இல்லை. இசை யென்றால் ஏதோ ஒருவர் பாட இன்னொருவர் தலையாட்டி விட்டுப்போகிற சமாச்சாரம் மட்டுமில்லை! அதிலே நிறைய விஷயம் இருக்கிறது.

'காஞ்சிப்பண்' பாடினால் புண்கள சீக்கிரமாக ஆறிப் போய்விடும் என்று சங்ககாலப் புலவர்கள் பாடியிருக்கிறார்கள். அவர்களுக்கென்ன? ஏதோ ஒரு மனோ நிலையிலே அப்படிப் பாடிவிட்டுப் போய்விட்டார்கள் என்று நினைக்கலாம். ஆனால் இப்போதுசில டாக்டர்கள் சொல்வதைப் பார்த்தால், அவர்களெல்லோரும் அனுபவத்தைத் தான் பாட்டிலே சொல்லியிருப்பார்கள் போலிருக்கிறது.

பம்பாயில் ஒரு டாக்டர். ராமகாந் கே. கெனி என்னும் பெயர் கொண்டவர் இசை மூலமாக இதய நோயைக் குணப்படுத்திவிடலாம் என்று சொல்லுகிறார். சும்மா சொல்லவில்லை: விஞ்ஞான ரீதியாகச் சொல்கிறார். இசை மூலமாக அவர் சில இதய நோயாளிகளைக் குணப்படுத்தியிருக்கிறார். அது மட்டுமில்லை. சில ஆஸ்துமா நோயாளிகளையும் குணப்படுத்தியிருக்கிறார். அப்படி அவர் குணப்படுத்திய நோயாளிகளை நிருபர்களிடம் காட்டினாராம். முற்றிய நிலையிலே இருக்கிறகாச நோயைக் கூட இசை மூலமாகக் குணப்படுத்த முடியும் என்பது நிருபணமாகிறது என்று அவர் சொன்னாராம்.

பொதுவாக நமக்கு வருகிற வியாதிகளுக்கும் மனதிற்கும் ஏதோ ஒரு சம்பந்தம் இருக்கிறது. இசையைக் கேட்கிற பொழுது மனது இலேசாகிறது மனதுக்கு இதமாக இருக்கிறது. அதனால் வியாதி குணமாவதற்கும் அது காரணமாகஇருக்கும் போலிருக்கிறது. கடவுளை வணங்குகிறபொழுது கண்ணை மூடிக்கொண்டு சிலர் பாடுகிறார்களே எதற்காக? கடவுள இவரின்பாட்டை மிகவும் ரசித்துக் கேட்கிறார் என்பதற்காகவோ? இவர் பாடுவது இவருக்கே மருந்தாகிறது! அதுதான் காரணம்.

எந்தமதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அவர்களின் வேண்டுதலை இசை ரூபமாகத்தானே சொல்கிறார்கள். கந்தசஷ்டிகவசம் கந்தரனுபூதி, விஷ்ணு சகஸ்ர நமம, சுப்பிரபாதம் எல்லாம் சொல்லுவது எதற்காக? இவைகளுக்கெல்லாம் ஆன்மீகக் காரணங்கள் எதுவாக இருந்தாலும், இதயத்துக்கு இதமாயிருக்கிறது என்பது எல்லாரும் சுலபமாகப்புரிந்து கொள்ளக்கூடிய ஒருகாரணம்.

யானைக்கு மதம்பிடிக்கிறதல்லவா? அப்படிப்பட்ட மதம்பிடித்த யானைகூட இசைக்கு அடங்கிவிடும் என்று தோன்றுகிறது. ஒருபெரிய மலை. அங்கே மதங்கொண்ட யானைஒன்று பிளிறிக் கொண்டு ஓடிவருகிறது. அது ஏன் ஓடிவருகிறது தெரியுமா? தினைப்புனத்திலுள்ள தினைக்கதிர்களைத் தின்பதற்காக! அந்தநேரத்தில் தினைப்புனத்திற்குக் காவல் காத்துக்கொண்டு ஒரு இளம் பெண் நின்றுகொண்டிருக்கிறாள்.

கொஞ்சநேரத்திற்கு முன்னர்தான பக்கத்தில்உள்ள சுனைநீரில் நீராடிவிட்டுவந்து நிற்கிறள். நீளமான கூந்தல் ஈரமாகஇருக்கிறது. அதனால் அதைக் கோதிக்கொண்டிருக்கிறாள். அந்த இளம்பெண் தன்னுடைய கூந்தலைக் கோதிக்கொண்டே மிகவும் இனிமையாகக் குறிஞ்சிப்பண்ணாகிய தமிழிசையை பாடிக்கொண்டே தலைமுடியைக் காயவைத்துக்கொண்டிருக்கிறாள் அங்கே ஓடிவந்த யானை இந்தஇசையைக் கேட்டது. அவ்வளவுதான் அப்படியே அசையாமல் நின்றுவிடுகிறது. தினைக்கதிரைத் தின்னவந்ததையே மறந்துவிடுகிறது.

பசியையெல்லாம் மறந்து இசையிலே மயங்கி நிற்கிறது அந்த யானை. அகநானூற்றில் இந்தப் பாட்டு இருக்கிறது.

'ஒலியல் வார் மயிர் ஊரிணள் கொடிச்சி பெருவரை மருங்கில் குறிஞ்சி பாடக் குரலும் கொள்ளாது நிலையினும் பெயராது படாஅப் பைங்கள் பாடுபெற்றாய் என மறப்புகல் மழ களிறு உறங்கும்'

மயிலும் பாம்பும் பகை; யானையும் சிங்கமும் பகை, மானும் புலியும் பகை ஆனால் புல்லாங்குழல் இசையைக் கேட்டுவிட்டு இவைகள் பகை மறந்து கூடியிருந்து, மகிழ்ச்சியாக இருந்ததாகப் பெரிய புராணத்தில் ஒரு பாட்டு இருக்கிறது. பகைமையையே மறந்துவிட வைத்துவிடுகிறதென்றால், இசைக்கு உள்ள சக்தி எப்படிப்பட்டதென்று பாருங்கள்.

ஒருகதை தெரியுமா? உங்களுக்கு? பத்திரிகையில் பார்த்தேன். ஒரு சங்கீத வித்துவானைப் பற்றி இரண்டுபேர் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஒருவர் "அதோ இருக்கிறாரே அந்த வித்துவான் பாடினால், நாள் பூராவும் கேட்டுக் கொண்டிருக்கலாம்' என்று சொல்கிறார். 'அவ்வளவு நன்றாகப் பாடுவாரா' என்று கேட்கிறார் மற்றவர். அதற்கு இவர் 'அப்படியில்லை... அவர் ஆரம்பித்தால் அவ்வளவு சீக்கிரத்தில் முடிக்கமாட்டார்! அதனால் அப்படிச் சொன்னேன்' என்றார். □

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# 7ஆயிரத்து800பேர் விவசாய ஒய்வூதிய திட்டத்தில் இணைவு

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 12 கமநலசேந்திர நிலையங்களிலும் மொத்தமாக இதுவரை 7ஆயிரத்து 800பேர் விவசாய ஒய்வூதியத் திட்டத்தில் இணைந்துள்ளனர்.

இவர்களுள்800 விவசாயிகள் தற்சமயம் தமது விவசாய ஒய்வூதியத்தைப் பெற்று வருகின்றனர்.

(உ-77)

# தமிழ் நிறைவேற்று அதிகாரிகள் ஆட்சேர்ப்பு செய்யப்படவேண்டும்

## அமைச்சர் ஆறுமுகன் கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்க சேவைக்கு தமிழில் கரும மாற்றக் கூடிய போதிய எண்ணிக்கையான நிறைவேற்று அதிகாரிகளை சேர்க்கவேண்டும் என்று வீடமைப்பு அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் அரசாங்கத்தைக் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அமைச்சரின் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழ் மக்களுடன் தமிழில் தொடர்புகொண்டுகருமமாற்றுவதற்கு இன வீத அடிப்படையில் தமிழர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

அரச சேவையில் 25 சதவீதமளவுக்கு தமிழர்கள் பணிபுரிய வேண்டும். இப்பொழுது பெரும்பாலான அரச நிறுவனங்கள் தமிழ்பேசும் மக்களுக்கு திருப்திகரமானமுறையில் சேவை செய்யவில்லை. இக்குறைபாடு நிர்வாக சீர்திருத்தக்குழுவினாலும் இனங்காணப்பட்டிருக்கிறது.

அரச நிறுவனங்கள் அந்தந்த மொழிகளில் சேவை செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டிருப்பினும் அவ்வாறான ஒரு நிலை அரச சேவையில் இல்லை.

அரச நிறுவனங்களின் வரவேற்பு கருமபீடத்தில் தமிழ் மொழியில் பணியாற்றக் கூடியவர்கள் பணிக்கமர்த்தப்படல் வேண்டும் என்று மேலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (உ)

# கைக்குண்டுடன் கைதான இளைஞர்கள் இருவருக்கு விளக்க மறியல் உத்தரவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு செங்கலடி பிரதேசத்தில் வைத்து கைக்குண்டுகளுடன் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களையும், எதிர்வரும் டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிமன்ற நீதிபதி ஏ.எல் அப்துல் கபூர் உத்தரவிட்டுள்ளார்.

வாழைச்சேனை சுற்றுலா நீதிமன்றத்தில் ஏறாவூர் பொலிஸாரினால் இவ்விரு இளைஞர்களும் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்டனர்.

செங்கலடியைச் சேர்ந்த தர்மரட்ணம் தவராஜா, குலசேகரம் வடிவேல் ஆகிய இரு இளைஞர்களுமே கைக்குண்டுகள், கண்ணிவெடிகளுடன் அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

(உ-8)

## பத்மநாபாவின் 51 வது பிறந்தநாள் நேற்று அனுஷ்டிப்பு

(ஈச்சமோட்டை)

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மறைந்த தலைவர் தோழர் பத்மநாபாவின் 51 வது பிறந்த தினம் நேற்று வரதர் அணியால் அனுஷ்டிக்கப்பட்டது.

தோழர் பத்மநாபாவின் போராட்டப் பணிகளை நினைவு கூரும் துண்டுப் பிரசுரங்களை நேற்றைய தினம் கட்சியின் ஆதரவாளர்கள் யாழ் நகரப் பகுதியில் விநியோகித்தனர்.

(உ-59)

# குழுமோதலைக்கட்டுப்படுத்த பொலிசார் துப்பாக்கிச்சூடு ஒருவர்பலி; 7 பேர் காயம்

(காலி)

காலி தெவட்டப்பகுதியில் நேற்று முன்தினம் இரவுஇடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச்சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டதுடன 7பேர் காயம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இருபிரிவினரிற்கு இடையே இடம்பெற்ற கைகலப்பினைக் கட்டுப்படுத்த பொலிசார் மேற்கொண்டதுப்பாக்கிப்பிரயோகத்திலேயே இவ்வாறு ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் என்றும் காயமடைந்த 7 பேரும் காலி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை, இச்சம்பவத்தில் இருவர்த்தக நிலையங்களும் பெற்றோல் நிலையம் ஒன்றும் 3 மோட்டார்சைக்கிள்களும் சேதமடைந்துள்ளதாக தெவட்டப்பகுதி பொலிஸ்அதிகாரி தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தையடுத்து இப்பகுதியின் பாதுகாப்பை கடற்படையினர் பொறுப்பேற்றுள்ளனர்.

(உ-10)

## இளம் பிக்குகள் விருதிக்கு தளபாடங்கள்

(கொழும்பு)

மல்வத்தை பௌத்த பீடத்தின் இளம் பிக்குகளுக்கான விடுதிக்கு, வீடமைப்பு அமைச்சு நிதியிலிருந்து ரூபா இருபத்தைந்து இலட்சம் பெறுமதியான தளபாடங்களை அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் வழங்கியுள்ளார்.

இதற்கான கோரிக்கையொன்றை மகாநாயக்கதேரர் ரம்புக்வெல ஸ்ரீ விபசிதேரர் தொண்டமானிடம் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ)

# மட்டு. மாவட்டத்தில் 158 குடும்பங்கள் இதுவரை மீள்குடியேற்றம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில்இருந்து கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் இடம் பெயர்ந்துள்ள மக்கள் தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலினை அடுத்து மீளக்குடியமர்ந்து வருகின்றனர்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட புனர்வாழ்வு திட்டப்பணிப்பாளர் என். தயாபரன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில்இருந்து 12 குடும்பங்களும் வன்னியில் இருந்த 146 குடும்பங்ளும் மீளக்குடியமர்ந்துளள தாக அவர்மேலும் தெரிவித்தார்.

(உ-10)

## வாழ்த்து மடல் விற்பனை வருமானம் புனர்வாழ்வுக்கு

(ஈச்சமோட்டை)

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி மாணவர்களால் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கும், போரினால் பாதிப்படைந்த குடும்பங்களுக்கும் உதவும் முகமாக கிறிஸ்மஸ் வாழ்த்து மடல்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

இவ் வாழ்த்து மடல்கள் குருத்துவக் கல்லூரி மாணவர்களின் கைவண்ணத்தில் அவர்களது கருத்துக்கள், ஓவியங்களை உளளடக்கியதாக உள்ளன.

இவ்வாறு விற்பனை மூலம் பெறப்படும் நிதியானது மேற்குறிப்பிட்ட சமூகப் பணிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

(உ-59)

# உள்துறை அமைச்சுக்கான வரவு-செலவுத்திட்ட நிதி ஆதரவாக 103 வாக்குகள்

(கொழும்பு)

உள்துறை அமைச்சுக்கான வரவுசெலவுத்திட்ட நிதி ஒதுக்கீடு 32 மேலதிக வாக்குகளால் நேற்றுமுன்தினம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.

ஆதரவாக 103 வாக்குகளும் எதிராக 71 வாக்குகளும் அளிக்கப்பட்டன. ஈ.பி.டி.பி, புளொட் ஆகியன ஆதரவாக வாக்களித்தன.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே. வி. பி. என்பன எதிராக வாக்களித்தன.

(த)

# பளை மத்திய கல்லூரி ஜனவரி முதல் இயங்கும்

(அரியாலை)

யுத்த அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்து புலோலியில் இயங்கி வரும் பளை மத்திய கல்லூரி ஜனவரி முதல் சொந்த இடத்தில் இயங்கவுள்ளது.

போரினால் சேதமடைந்த மேற்படி பாடசாலையின் கட்டடப்புனரமைப்பை ஜி.ரி.சற் நிறுவனம் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(உ-225)

# அதிகரித்து வரும் வீதி விபத்துக்களைத் தவிர்க்க அவதானமும், நடவடிக்கைகளும் அவசியமாகும்

சமீப காலமாக வீதி விபத்துக்கள் ஒரு தொற்று நோய் போல் பரவி வருவது யாவரும் அறிந்ததே. இவ் விடயம் ஒரு பொதுநலக்கேடாக அமைவதுடன வைத்தியசாலைகளுக்கு ஒரு பெரும் சுமையாகவும் அமைகின்றது. இதற்குரிய காரணங்களாக கவனத்தில் கொள்ளப்படக் கூடியன:

1. அதிகரித்து வரும் வாகனக் கொள்வனவும், அதற்கேற்ப விரிவுபடுத்தப்படாத வீதிகளும்,

2. அதிகரித்து வரும் சுற்றுலாப்பயணிகள்,

3. அதிகரித்து வரும் நடைபாதையோரக் கடைகள்.

4. கடந்த 15 வருடங்களாகப் பாவனையில் இல்லாத வீதி ஒழுங்கு நடைமுறைகளும் அதனைப் பற்றிய போதிய அறிவற்ற இளம் தலைமுறையினரும்,

5. வீதி நடைமுறைகள் பற்றிப் போதிய அறிவிருந்தும் அதனை அசட்டை செய்யும் மனப்பாங்குடையவர்கள்,

6. வீதியில் கவனத்தைப் பதிக்காமல் வீதியைப் பாவிப்பவர்கள்,

7. ஒரு திசைக்கு மட்டுமேயுரிய (One Way) பாதையை அதற்கு எதிர்த் திசையில் பயன்படுத்துதல்,

8. வீதியில் சமாந்தரமாக செல்லுதல்,

9. போதிய பயிற்சி, சாரதி அனுமதி பத்திரம் பெறாது வாகனத்தைச் செலுத்துதல்,

10. கேட்டல், பார்வைக் குறைபாடுகள் உள்ளவர்கள் தகுந்த மாற்று உபகரணங்கள் பயன்படுத்தாமை,

11. மது போதையில் வீதியைப் பாவிப்பவர்கள்,

12. அரசாங்க, தனியார் வாகனச் சாரதிகளுக்கிடையிலான போட்டிமனப்பான்மை,

13 மிதிபலகையில் பயணம் செய்தலும், அளவுக்கதிகமான சுமையை வாகனங்களில் ஏற்றுதலும்,

14. சீர்திருத்தப்படாத நிலையில் பாவனையில் உள்ள வாகனங்கள்,

15. பலவருடங்களாக திருத்தப்படாத வீதிகள்,

### விழிப்புணர்ச்சி வேண்டும்

இவ்வாறான இறப்புக்களையும் மேலதிக சேதங்களையும் தவிர்க்கும் முகமாக முடிந்தளவு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது எமது கட்டாய கடமையாகின்றது. எனவே இது தொடர்பான விழிப்புணர்ச்சியை மக்களிடையே ஏற்படுத்துவதன் மூலம் இப்பிரச்சினைகளை கணிசமான அளவு குறைக்கலாம்.

**நவரட்ணம்சாந்தகுணாகரன்**
மருத்துவ பீடம்
யாழ். பல்கலைக் கழகம்

1. வீதி ஒழுங்கு முறைகளைப்பற்றி அறிந்து கொள்வதுடன் அதனைச் சரியான முறையில் பின்பற்றுதல்.

2. வாகனம் செலுத்தலில் பயிற்சி அனுமதிப் பத்திரம் பெற்ற பின்னரே வாகனத்தைக் கையாளுதல் (பயிலுநர்கள் வாகனத்தில் 'L' மட்டை மாட்டியிருத்தல்);

3. போதிய முன்னெச்சரிக்கையுடன் வாகனங்களைப் பாவித்தல்;
உதாரணம்:-
இருக்கைப்பட்டி (Seat beit)
தலைக்கவசம் (Helmet)

4. வீதியில் சமாந்தரமாகச் செல்வதை முற்றாக நிறுத்தல்

5. ஒரு திசைக்கு மட்டும் உரிய பாதையை எதிர்த் திசையில் பாவிப்பதை நிறுத்தல்;

6. வாகனங்கள் முந்திச் செல்லும் போது (Ouertake) எதிர்த்திசையில் வருபவர்களை கவனத்தில் கொள்ளல்.

7. வாகனத்தை பின்னோக்கி நகர்த்தும் போது (Reverse) போதிய அவதானத்துடன் இருத்தல்;

8. பாதையை கடக்கும் போது இரு திசையையு அவதானத்தில் கொள்ளல்'

9. மதுபோதையில் வாகனம் ஓட்டுதலையும் வீதியில் நடமாடுவதையும் தவிர்த்தல்.

10. வாகனத்தை பாவனைக்கு எடுக்கு முன் அவற்றின் நிலையை அவதானித்தல் (Light, break, signal)

11. அளவுக்கு அதிகமாக பிரயாணிகளை ஏற்றுவதையும் மிதிபலகை பிரயாணத்தையும் தவிர்த்தல்.

12. அரசாங்க மற்றும் தனியார் வாகனங்களுக்கிடையேயான போட்டி மனப்பான்மை காரணமாக வாகனங்கள் எல்லையற்ற வேகத்தில் செல்லல் தவிர்க்கப்படல்.

13. பாடசாலை மாணவர்களுக்கு வீதி ஒழுங்கு முறைகள் வீதி விபத்துக்கள் பற்றி விழிப்புணர்ச்சி ஏற்படுத்த காவல் துறையினர் மேலும் கூடிய நடவடிக்கைகள் எடுத்தல்;

### தற்காலிக, நிரந்தர பாதிப்புகள்

இவற்றினால் உயிரிழப்புக்கள் ஏற்படுவதுடன், ஒருவருக்கு ஏற்படும் பாதிப்புக்கள் நிரந்தரமானதானதாகவோ அல்லது தற்காலிகமானதாகவோ அமையலாம்.

நிரந்தர பாதிப்புகள்:

1. முக்கியமான அவயங்களில் பாதிப்பு ஏற்படல்.

தலையில் ஏற்படும் காயங்களினால் மூளையில் பாதிப்பு ஏற்படல்.

ஆண்மையற்றுப் போதல்:
கண்கள் குருடாதல்;
காயங்களினால் ஏற்படும் வடுக்களினால் முகம், உடல் விகாரமடைதல்;

2. சீர்திருத்த முடியாத அளவுக்கு வாகனங்கள் சேதமாக்கப்படல்;

தற்காலிகப் பாதிப்புக்கள்:

1. வைத்திய சிகிச்சையினால் (Eg: சத்திரசிகிச்சை) ஏற்படும் உடல், உள இன்னல்கள்.

2. வைத்தியச் செலவுகள்;

3. அவையங்களில் ஏற்படுத்தப்படும் பாதிப்புக்களினால் நாளாந்த வாழ்க்கையில் ஏற்படும் இடர்கள்;

உதாரணமாக:- கல்வி தடைப்படுதல், தொழில் பாதிப்படைதல்.

4. வேறு பாதிப்புக்கள்:

வழக்குகள் / விசாரணைகள் எதிர்கொள்ள வேண்டியிருத்தல்;
நஷ்டஈடு வழங்க வேண்டி இருத்தல்.
வாகனங்களை மறுசீரமைக்க வேண்டியிருத்தல்;

### வீதி விபத்துக்கள்

2001, 2002 ஆம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட வீதி விபத்துக்களின் சேத விபரங்கள் வருமாறு:-

தகவல்:-
போக்குவரத்து காவல்துறை அதிகாரி;

| ஆண்டு | மொத்தம் | இறப்பு | பாரியகாயம் | சிறியகாயம் | வாகனசேதம் |
|---|---|---|---|---|---|
| 2001 | 47 | 02 | 12 | 25 | 08 |
| 2002 ஐப்பசி 31 | 86 | 06 | 20 | 42 | 18 |

இதிலிருந்து 2002 ஆம் ஆண்டில் இறப்பு வீதம் அதிகரித்திருப்பது விளங்கிக் கொள்ள முடிகின்றது. இவ்வாண்டில் ஏற்பட்ட 6 இறப்புக்களும் சித்திரை மாதத்திற்கு பிறகே ஏற்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

### வீதி நடைமுறையில் கவனம்

எல்லாவற்றிற்கும் மேலாக வீதியை பாவிக்கும் ஒவ்வொருவரும் கவனத்தை வீதியில் நிலை நிறுத்தவேண்டும். காவல்துறை உத்தியோகத்தர் உட்பட வீதி நடைமுறைகள் தொடர்பாக அதிகாரமளிக்கப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களும் பின்வரும் நடை முறைகளில் கவனம் செலுத்தல் அவசியம்.

1. சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கலை விரிவு படுத்தல்;

2. ஆரம்பகால சாரதி அனுமதி பெற்றவர்களை மீள மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தல்.

3. வீதி நடைமுறைகள் மீறுபவர்களிடம் தண்டப்பணம் அறவிடல்;

4. வீதி நடைமுறைகள் பற்றிய அறிவுறுத்தல்களை மக்களுக்கு வழங்கல் (துண்டுப் பிரசுரம், பிரசாரங்கள்)

5. வாகன நெரிசலிற்கு ஏற்ப முடிந்தளவு வீதிகளை விரிவுபடுத்தலும், சீர்படுத்தலும்.

6. நடை பாதை யோரக் கடைகள் அகற்றப்படல்.

7. நெரிசல் மிகுந்த சாலைகளில் வாகனங்களை மெதுவாக செலுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்தல்.

8. பாதசாரிகள் கடவைகளை ஏற்படுத்துதல்.

உங்கள் பாதுகாப்பை நீங்களே உறுதி செய்து கொள்ள வேண்டும்.

## அங்கவீனமாக பிறக்கும் குழந்தைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

அண்மைக்காலத்தில் இலங்கையில் பிறக்கும் குழந்தைகளில் 10 வீதமானவை அங்கவீனமான நிலையில் பிறப்பதாக சுகாதார அமைச்சின் உயர் மருத்துவ அதிகாரி பெற்றி பெரேரா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பிறக்கும் சில குழந்தைகளுக்கு மட்டுமே உரிய நேரத்தில் தேவையான உதவிகள் கிடைக்கப்பெறுவதாககுறிப்பிட்ட அவர்- அங்கவீனமாகப் பிறக்கும் குழந்தைகளுக்கு உதவி செய்வதற்காக தேசியக் கொள்கையொன்றை உருவாக்க கடந்தகால அரசும் தற்கால அரசும் தவறி விட்டதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், அங்கவீனமாக குழந்தைகள் பிறப்பதற்கான காரணங்கள் மருத்துவ ஆய்வுகள் மூலம் ஆராயப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (உ-4)

## மத்தியவங்கிகுண்டுவெடிப்பு தீர்ப்பை எதிர்த்து மேன் முறையீட்டு மனு

(கொழும்பு)

இலங்கை மத்தியவங்கி குண்டுத் தாக்குதல் மீதான மேல் நீதிமன்றத்தின் தீர்ப்பைஇரத்துச்செய்யக்கோரி, நேற்றுமுன்தினம் உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்குத்தீர்ப்பில்மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள கதிர்காமத்தம்பி சிவகுமார் என்றவரே இம் மேன்முறையீடு செய்தவராவார்;

இவ்வழக்குத் தொடர்பில் விசாரணைமேற்கொண்ட குற்றப்புலனாய்வுத் துறையின் வழக்கு விசாரணை நெறிப்படுத்தல் தவறானது என்றும், மேல்நீதிமன்றத்தின் அடையாள அணிவகுப்பு விரோதமானது என்றும், தாக்குதல் இடம்பெற்ற இடத்தில் எடுக்கப்பட்ட கைரேகை தவறானது என்றும் சுட்டிக் காட்டி தீர்ப்பை இரத்துச் செய்யக் கோரி மனுத்தாக்கல்செய்யப்பட்டுள்ளது;

இதேவேளை இச்சம்பவம் தொடர்பான தீர்ப்பிலேயே தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே பிரபாகரனுக்கு 200 வருடங்கள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது;(இ)

## உண்டியல் உடைத்தவர் அகப்பட்டார்

(மந்திகை)

மாலு சந்திப்பிள்ளையார் ஆலய உண்டியலில் உள்ள பணத்தை திருடிய நபர், பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு நெல்லியடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை பகல் வேளையில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய நபரை விசாரிக்க முற்பட்ட வேளையே இத் திருட்டு சம்பவம் பற்றி தெரியவந்தது. (உ-23)

## எயிட்ஸ் விழிப்புணர்வு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் முதலாம் திகதி கொண்டாடப்படவுள்ள சர்வதேச எயிட்ஸ் தினத்தையொட்டி யாழ். மாவட்டத்தில் உள்ள 7 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் எயிட்ஸ் நோய் பரவும் முறைகள் அதை தடுப்பதற்கான வழிமுறைகள் தொடர்பான கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் வீடியோப் படக் காட்சிகள் என்பனவற்றை பொதுச் சுகாதார பரிசோதகர்களும் மற்றும் குடும்பநல சேவை உத்தியோகத்தர்களும் இணைந்து வழங்கவுள்ளனர்; (உ-252)

## அமெ. பிரதி அமைச்சர் இவ்வாரம் இலங்கைவிஜயம்

(கொழும்பு)

அமெரிக்காவின்பிரதிவர்த்தக அமைச்சரும், முன்னாள் தூதுவருமான ஜேய் ஹம்ஸ்வன் இவ்வாரம் இலங்கை வரவுள்ளார்.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும்இடையில் கைச்சாத்திடப்பட விருக்கும் சுதந்திர வர்த்தகஒப்பந்தம்பற்றிய பூர்வாங்க ஏற்பாடுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தவே அவர் இலங்கை வருகிறார்.

கடந்த ஆண்டு ஜூலை மாதம அமெரிக்க வர்த்தக அமைச்சருக்கும், பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவுக்கும் இடையில் இது தொடர்பாக பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பு வரும் அமெரிக்கப் பிரதிவர்த்தக அமைச்சர், அரச மற்றும் தனியார் வர்த்தக பிரமுகர்களுடனும், வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்காவுடனும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். (உ-8)

## கண்காணிப்புக் குழுவில் புதிய புலிகள் பிரதிநிதி

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தரப்பில் மட்டக்களப்பிற்கான கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதியாக இராசையாயோகேந்திரா நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை புலிகள் தரப்பில் கடமையாற்றிய எஸ். கிருஷ்ணபிள்ளையின் இடத்திற்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

சமீபத்தில் கிளிநொச்சியில் நடைபெற்ற போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மாவட்டப் பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்து கொண்டு இப் புதிய நியமனத்தை யோகேந்திரா ஏற்றுக் கொண்டார்;

இதேவேளை, போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் அரசதரப்பு பிரதிநிதியான என். வி. ஏ. அப்துல் ரகுமான் தனது பதவியைஇராஜினாமா செய்துள்ள போதிலும் இதுவரையிலும் புதிய உறுப்பினர் நியமிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-10)

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரணதர) மாதிரிப் பரீட்சை - 2002

**General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2002**


கணிதம் - II 3மணி (தொடர்ச்சி)

ஆக்கம்: செ. தவராசா
(யாழ்.இந்துக்கல்லூரி)

8. (a) வட்டத்தினது தொடலிக்கும், தொடுப்புள்ளியிலுள்ள நாணிற்கும் இடையிலுள்ள கோணமானது ஒன்றுவிட்ட வட்டத்துண்டக் கோணத்திற்குச் சமனாகும் என நிறுவுக?

(b) $P\hat{A}T$ ஒரு தொடலியாகும் $B\hat{A}T = 42^0$ எனில் $A\hat{C}B$, $A\hat{D}B$ என்பவற்றைக்கணிக்க?


(C) K,L,M என்பன ஒரு வட்டத்தில் உள்ள மூன்று புள்ளிகளாகும். L இல் வரைபடம் வரையப்பட்ட தொடலி ஆனது நீட்டப்பட்ட KMஐ P இல் சந்திக்கிறது. $K\hat{L}P = L\hat{M}P$ என நிறுவுக?




(9) (a) முக்கோணி ஒன்றின் இரு பக்கங்களின் நடுப்புள்ளியினூடாக வரையப்படும் நேர்கோடு மூன்றாவது பக்கத்திற்கு சமாந்தரமாகவும் அப்பக்கத்தின் அரைவாசியாகவும் இருக்கும் எனநிறுவுக?

(b) ABCD ஓர் இணைகரமாகும் E,F,G என்பன முறையே பக்கங்கள் DC,AD,BC ஆகியவற்றின் நடுப்புள்ளிகளாகும்கோடுகள் AE யும் FG யும் M இல் வெட்டுகின்றன. $DE = {}^2/_3\ MG$ என நிறுவுக?


(10) அருகே தரப்பட்ட கிடைப்படத்திற்கான
(1) வெளிக்களக்குறிப்பை எழுதுக?
(2) 20 M அகலமான வீதியின் ஒரு ஓரத்தில் உள்ள வீட்டில் W என்னும் யன்னலில் இருந்து அதற்குநேரெதிரே உள்ள கட்டடமொன்றின் உச்சியினது ஏற்றக்கோணம் $75^0\ 40'$ யும் அடியின் இறக்கக்கோணம் $32^0$யும் ஆகும்.
(i) யன்னல் நிலத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளது?
(ii) கட்டடத்தின் உயரம் யாது?




## கணிதம் பகுதி - I இன் விடைகள்

01) ரூபா 66.00
02) படித்திறன் $= {}^2/_3$
03) 1.033
04) $x = 70^0$
05) அரைவாசியாகவும்
06) ${}^1/_2 \times {}^1/_3 = -{}^1/_6$
07) ${}^5/_7$
08) v-u= 4
09) 3%
10) a= 4
11) y=5
12) $a = 35^0$
13. $x^2 - 7x = (3.5)^2$
$= (x-3.5)^2$
14) 45kg
15) 35-13= 22
16. B=45
17) p-a/m
18. i) (a,e) (b,f) (d,h) (c,g)
ii) (b,h) (c,e)
19) 102
20. $ABC = 55^0$
21) 5%
22. 25
23) $x$=70, y=100
24. $x$=3
25) $\sin Q = {}^6/_{10} = {}^3/_5$
$\cos Q = {}^8/_{10} = {}^4/_5$
$\tan Q = {}^6/_8 = {}^3/_4$

26.




27. (5a-3b) $(25a^2+15ab+9b^2)$
28. $x$=9, y=15
29. 5,8,11
30.1) மூட்டற்ற தொடைச் சோடிகள்
2) (1,4,6,8,)
3) 6

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரணதர) மாதிரிப் பரீட்சை - 2002

**General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2002**

விஞ்ஞானம் - 1மணி

ஆக்கம்: செ. அன்ரன்
(யாழ்மயிலிட்டி றோ.க.வி)

## பகுதி - I

**கவனிக்க: எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. பரீட்சைக்கு அமைவான 10 வகையான பல்தேர்வு வினாவகைகளும் அடங்குகின்றன.**

01. சடைமுளைகளால் நிறைவேற்றப்படும் பிரதான தொழில்
(1) சமிபாடடைந்த கொழுப்புணவை உறிஞ்சல்
(2) சமிபாடடைந்த அமினோஅமிலங்களை உறிஞ்சல்
(3) சமிபாடடைந்த குளுக்கோசை உறிஞ்சல்
(4) சமிபாடடைந்த உணவுக்கூறுகளை உறிஞ்சல்

02. உரிய இழையத்தின் தொழில்
(1) கனியப்பு நீரைக் கடத்தல்
(2) ஆதாரத்தை அளித்தல்
(3) உணவுக்கூறுகளைக் கடத்தல்
(4) தண்டின்துணை வளர்ச்சியில் உதவுதல்

03. சமதானி அணுக்கருக்களில்
(1) வேறுபடும் எண்ணிக்கையான புரோத்தன்கள் உண்டு
(2) வேறுபடும் எண்ணிக்கையானஇலத்திரன்கள் உண்டு
(3) வேறுபடும் எண்ணிக்கையான நிறுத்திரன்கள் உண்டு
(4) வேறுபடும் எண்ணிக்கையான துணிக்கைகள் உண்டு

04. பின்வரும் பொருட்களில் எது செயற்கைப் பொருளாகும்
(1) கம்பளி (2)பட்டு (3) பருத்தி (4) நைலோன்

05. மனித உணவுக்கால்வாயிலுள்ள தசைப்படையில் காணப்படுவது
(1) வன்கூட்டுத்தசை (2)மழமழப்பான தசை
(3)வரித்தசை (4)இச்சைவழிஇயங்குதசை

06. உயிரிரசாயன ஊக்கி அல்லாதது
(1) பெப்சின் (2)ரெனின் (3) தயலின் (4)நிக்கல்


07. ஒலிபதிவு நாடாவில் பதியப்படும் சரியான ஒழுங்கு
(1) ஒலி → மாறும் மின்னோட்டம் → விரியலாக்கி → பதிவு → காந்தகோலம்
(2) ஒலி → விரியலாக்கி → மின்னோட்டம் → காந்தகோள் → பதிவு
(3) ஒலி → காந்தகோலம் → விரியலாக்கி → பதிவு
(4) ஒலி → விரியலாக்கி → காந்தகோலம் → பதிவு

08. மின்காந்தத்தூண்டலில் தூண்டல்மின்னோட்டத்தின் திசையை அறிய உதவும் விதி
(1) பிளெமிங்கின் இடகரவிதி (2) பிளெமிங்கின் வலகர விதி
(3) அம்பியரின் விதி (4) மாக்ஸ்வெல் தக்கைத்திருகி விதி


09. கனியஎண்ணெயின் விளைபொருள்களிலிருந்து உருவாக்க முடியாத பதார்த்தம்
(1) பொலித்தீன் (2) உரப்பை (3) பிளாஸ்ரிக் (4)பருத்தி

10. றபர் பாலின் ஒரு கூறாகக் காணப்படாதது
(1) நீர் (2) புரதம் (3) கொழுப்பு (4) வெல்லம்

11. இருதட்டு பஸ்வண்டி ஒன்றின் கீழ்த்தட்டிலுள்ள நடத்துனர். மேல் தட்டிலுள்ள பிரயாணி ஒருவரைப்பார்க்க ஆடிகளைப் பயன்படுத்துகிறார். பஸ்வண்டியின் பக்கக் குறுக்குவெட்டில் காட்டப்பட்டவாறு ஒளிக்கதிர்கள் நடத்துனரின் கண்ணிற்குள் புக வேண்டும்.




நடத்துநர் பிரயாணியைப் பார்க்கக்கூடியதாக ஆடிகள் எவ்வாறு வைக்கப்பட வேண்டும்?




12. குருதி வழங்கும் ஒருவருக்கு இருக்கவேண்டிய இயல்புகள்
(A) 20 Kg-40Kg நிறைவுடையவராக இருத்தல் வேண்டும்
(B) 80% க்கு மேல் ஈமோகுளோபின் இருக்க வேண்டும்
(C) நீரிழிவு நோய் இல்லாதவராக இருக்கவேண்டும்
(D) 20 வயதுக்குட்பட்டவராக இருக்க வேண்டும்
(1) AB (2) BC (3) AD (4) CD


13. தோற்கருவி ஒன்றின் சுருதியைக் கூட்டுவதற்கு
A - மென்சவ்வின் பரப்பளவைக்குறைக்கலாம்
B - மென்சவ்வின் மடிப்பைக் கூட்டலாம்
C - மென்சவ்வின் இழுவையைக் கூட்டலாம்
D - மென்சவ்வின் பரப்பளவைக் கூட்டலாம்
(1) AC (2) BC (3) CD (4) AD

14. ஆடல்மின் உலோற்றளவுச் செம்மையாக்கலில் பயன்படும் மின்சாதனம்
(1) ரான்சிஸ்ரர் (2)டையோட் (3)தடையி (4) மின்மாற்றி

15. உடற்கோளாறுகளைக் கண்டறிய உதவும் கண்டுபிடிப்புகள்
(1)X கதிர்,UV கதிர் (2) ஒளியியல் ஸ்ரார்அவசியம்
(3) UV கதிர்,நுண்அலை (4) லேசர்கதிர், நுண்அலை

16. இலங்கை வனக்காப்பு நிறுவன (wwf) சின்னத்தில் உள்ள விலங்கு
(1) யானை (2) கோலாகரடி (3)புலி (4)சிங்கம்

17.




இலத்திரனியல் துணைச்சாதனத்தின் குறியீடு காட்டப்பட்டுள்ளது இதற்குரிய சாதனம்
(1) கொள்ளளவி (2) தேமிஸ்ரர் (3) Ic (4) LDR

18. பலமில்லியன் ஆண்டுகளாக மாறலின்றி வாழும் உயிர்.
(1)பதாதி (2) சுவடு (3) படிவு (4) வாழும் உயிர் சுவடு

19. மூலகம் $_{20}X$ஓயிலுள்ள இலத்திரன்,புரோத்தன் நிறுத்திரன் முறையே
1) 20, 20, 12 2) 20,20,22
3) 22,20,20 4) 12, 20, 20

20.




எந்தச் சுற்றுகளில் எல்லாத் தடையிகளும் ஒன்றுக்கொன்று சமாந்தரமாக இருக்கும்?
1) W உம் Z உம்
2) X உம் Y உம்
3) W உம் Y உம்
4) X உம் Z உம்

21. படத்தில் காட்டிய ABC உருவங்கள் ஆற்றும் பணிகளின் சரியான ஒழுங்கு




1) விரியலாக்கம், சீராக்கம், ஒருங்கிணை சுற்று
2) சீராக்கம், விரியலாக்கம், ஒருங்கிணை சுற்று
3) ஒருங்கிணை சுற்று, சீராக்கம், விரியலாக்கம்
4) சீராக்கம், ஒருங்கிணைசுற்று, விரியலாக்கம்

22. குருதியிலுள்ள சிறுமணியுள்ள வெண்குழியவகை
(1) சிறுதட்டு (2) இயோசிநாடி (3) ஒற்றைக்குழியம் (4) நிணநீர்க் குழியம்

23.

| R | L |
|---|---|
| +2.5 | + 2.5 |

கண்வைத்திய நிபுணரின் குறியீட்டின் படி ஒருவர் அணிய வேண்டிய வில்லை
1) குவிவில்லை 2) குழிவில்லை
3) உருளைவில்லை 4) கூறமுடியாது

24. A - செந்தரவுப் புத்தகம்
அழியும் ஆபத்திலுள்ள உயிரினம்
B - வனபரிபாலன சபை
காட்டுத்தாவ்ரங்கள்
C - சுகாதாரசேவை
AIDS
D - பூமிஉச்சி மாநாடு
உலகசமாதானம்

அருகே தரப்பட்ட தரவுகளில் முதலாவதன் அபிவிருத்தி இரண்டாவதின் மீது எந்த விதத்திலும் செல்வாக்குச் செலுத்தமாட்டாது
1) A 2) B 3) C 4) D

# மக்கள் போராட்டம் வன்முறைக்கு வித்திடும்

## காவலூர் பொலிஸார் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுப் பகுதியில் கடந்த சனிக்கிழமை பெருமளவு ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் பிரவேசித்தமையை கண்டித்து மக்கள் நடத்திவரும் போராட்டம், தொடருமானால் அம்பாறை காஞ்சிரங்குடா பகுதியில் நடந்த சம்பவம் போன்று இங்கு வன்முறைகள் வெடிக்கும் என ஊர்காவற்றுறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எச்சரித்துள்ளார்.

இதேவேளை நெடுந்தீவில் இடம்பெற்றுள்ள இச்சம்பவத்தைக் கண்டித்து தீவுப் பகுதியின் பல்வேறு பகுதிகளிலும் வீதிமறிப்பு போராட்டங்களை நிகழ்த்தி தமது எதிர்ப்புக்களை வெளிக்காட்டி வருகின்றனர்.

இப்போராட்டத்தில் அரச, அரச சார்பற்ற பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள், பொது அமைப்புக்கள் என ஆயிரக்கணக்கானவர்கள் பங்கு பற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கவை.

(உ-10)

# முந்தல் குழு மோதல் முடிவுக்கு வந்தது

(கொழும்பு)

புத்தளத்தில் உள்ள முந்தல் பகுதியில் சிங்களமுஸ்லிம் குழுக்களுக்கிடையே கடந்த ஞாயிறு ஏற்பட்ட மோதல் தற்சமயம் தீர்த்துவைக்கப்பட்டுள்ளது என பாராளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் தெரிவித்துள்ளார்.

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்காவின் பணிப்பின்பேரில் இந்தச்சம்பவம் தொடர்பாக 4 பொலிஸ் குழுக்கள் விசாரணை மேற்கொண்டுள்ளன.

அப்பிரதேசத்தில் நிலைமைகளை கட்டுப்படுத்தவென நூற்றுக்கும் அதிகமான மேலதிக பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இருவெவ்வேறு இனத்தைச் சேர்ந்த ஓட்டோ சாரதிகளுக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாக ஏற்பட்ட மோதலையடுத்து அப்பிரதேசத்தில் 10 கடைகள் தீவைக்கப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ-8)

## தென்பகுதியில் இருந்து எடுத்து வரப்பட்ட

# விதைநெல் கொள்வனவில் விவசாயிகள் நாட்டமில்லை

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு விநியோகிக்கவென கமநலசேவைகள் திணைக்களத்தினால் தென்பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்ட விதைநெல்லினைப் பெறுவதில் இம்முறை விவசாயிகள் பெருமளவில் நாட்டம்காட்டவில்லை எனவும்:

இதனால் பெருஞ்சிரமங்களுக்கு மத்தியில் மேற்படி திணைக்களத்தினால் கொண்டுவரப்பட்ட விதைநெல் கமநல கேந்திர நிலையங்களில் தேங்கியிருப்பதாகவும் அறியப்படுகின்றது.

இதுஇவ்விதமிருக்க மாவட்டத்திலுள்ள சில அரசசார்பற்ற நிறுவனங்கள் மாவட்ட விவசாயக்குழுவின் அனுமதியின்றியும் கமநலசேவைகள் திணைக்களத்தின் அனுமதியின்றியும் விவசாயிகளுக்கு விதைநெல்லை இலவசமாக விநியோகம் செய்தமை திணைக்களத்திற்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை மாவட்டத்தில் விவசாய அபிவிருத்தித்திட்டங்களை அமுல்செய்யும் அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது திட்டம்பற்றிய பூரண தகவல்களை மாவட்ட விவசாயக் குழுவுக்குச் சமர்ப்பித்தே செயல்படுத்த வேண்டும் என யாழ்மாவட்ட அரச அதிபர் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ- 77)

# பாலசிங்கத்தை கைது செய்ய

# சிஹல உறுமய முறையீடு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை உடனடியாகக் கைது செய்ய வேண்டுமென்று, சிஹல உறுமய, பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்துள்ளது.

மத்திய வங்கி குண்டு வெடிப்பு வழக்கில், 200 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவிடுதலைப் புலிகளின்தலைவர் வே.பிரபாகரனுக்கு, புகலிடம் மற்றும் ஆலோசனை வழங்குபவராக, சட்டத்துக்கு எதிராக அன்ரன் பாலசிங்கம் செயற்படுகிறார் என்றும், இதனால் அவரைக் கைது செய்ய வேண்டுமென்றும் சிஹல உறுமய முறைப்பாடு செய்துள்ளது; (இ)

# வடக்கு கிழக்கில் இயங்காத நிலையில் 38 பாடசாலைகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கில் கடந்த காலங்களில் ஏற்பட்டுள்ள யுத்த அனர்த்தங்களால் 6 மாவட்டங்களைச் சேர்ந்த 38 பாடசாலைகள் மீள இயங்காத நிலையில் உள்ளதாக மனிதவள அபிவிருத்தி மற்றும் கல்வி கலாசாரக் கிளையின் புள்ளிவிபரக்கிளை தெரிவித்துள்ளது.

இவற்றில் 34 தமிழ் மொழிப் பாடசாலைகளும் 4 சிங்கள மொழிப்பாடசாலைகளும் அடங்குகின்றன;

யாழ் மாவட்டத்தில் 16 பாடசாலைகளும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 8 பாடசாலைகளும், மன்னாரில் 6 பாடசாலைகளும், வவுனியாவில் 5 பாடசாலைகளும், அம்பாறையில் 2 பாடசாலைகளும், திருகோணமலையில் ஒருபாடசாலையும் மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(உ-10)

# மக்கள் விரோதச் செயற்பாடுகளில் ஈ.பி.டி.பி யினர் ஈடுபட்டனர்

## அவர்கள் கிளர்ந்தெழ இதுவே காரணம் என்கிறார் இளம்பரிதி

(லண்டன்)

நெடுந்தீவில்ஈ.பி.டி.பியினர் மீண்டும் முகாம் அமைத்துள்ளமையால் ஏற்பட்டஅசம்பாவிதங்கள் குறித்து யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி இளம்பரிதி லண்டன் பி.பி.ஸியின் தமிழோசைக்கு நேற்று முன்தினம் வழங்கிய செவ்வியின் விபரம் வருமாறு,

கேள்வி:- நெடுந்தீவில் பொது மக்கள் மீது பொலிஸாரால் தடியடி மற்றும் கண்ணீர் புகைக்குண்டுப் பிரயோகம் செய்யப்பட்டதாக கூறப்படுகின்றதே?

பதில்;- மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை, கடும் மழை பெய்யத் தொடங்கியது. இதனால் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மக்கள் வீதி ஓரங்களில் நின்றிருந்தனர்.

அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பொலிஸார் மற்றும் கடற்படையினரின் சீருடையில் துறைமுகத்தில் நின்ற ஈ.பி.டி.பியினர் தமது முகாமுக்கு லாண்ட்மாஸ்ரரில் செல்லத் தொடங்கினர்;

இதனை அறிந்தமக்கள் அவர்களின் முகாமுக்கு முன்பாக மறியல்போராட்டத்தை மேற்கொண்டனர்; இதன் போது பொலிஸார் தலையிட்டு மக்களைக் கலைந்து செல்லுமாறு கோரினர்.

இதற்கு மக்கள் மறுப்புத் தெரிவித்து தங்களது கோரிக்கைகளை வலுவாகமுன்வைத்தனர்.

எனினும்பொதுமக்கள் எவ்விதவன்முறைச் சம்பவங்களிலும் ஈடுபடாதபோதும், பொலிஸார் அவர்கள் மீது கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும், துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதில் மூன்று பொதுமக்கள் காயமடைந்துள்ளனர்;

கேள்வி: மக்களால் மேற்கொள்ளப்படும் போராட்டங்கள் புலிகளின் தூண்டுதலாலேயே மேற்கொள்ளப்படுவதாக ஈ.பி.டி.பி குற்றம் சாட்டுகின்றதே?

பதில்:- புலிகள் தூண்டிவிடுவதற்கு எவ்வித அவசியமும்இல்லை. ஏனெனில், எங்களின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளுக்கு எந்தவிதமான தடைகளும் விதிக்க மாட்டோம், அதற்கு நாம் மதிப்பளிக்கின்றோம் என்று கூறியுள்ளார்.

அதைவிட 'நாங்கள் அவர்களுக்கு எதிராக மக்களைத் தூண்டி விடுவதனால் நெடுந்தீவில் மாத்திரம் தூண்டி விடத் தேவையில்லை; யாழ். குடாநாட்டில் முழு இடங்களிலும் ஈ.பி.டி.பியினர் உள்ளனர். அவ்வாறு நாங்கள் தூண்டிவிடுவதாக இருபின் இங்கு ஒரு இடத்திலேனும் ஈ.பி.டி.பியினர் இருக்கமுடியாது. இது உண்மைக்குப் புறம்பான ஒரு பொய்க் குற்றச் சாட்டு;

கேள்வி:- ஈ.பி.டி.பியின் கட்டுப்பாட்டில் நெடுந்தீவுப் பிரதேச சபை உள்ள போது அவர்கள் அதனை ஆட்சி செய்வதற்கு என்ன பிரச்சினை உள்ளது?

பதில்;- எங்களுக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை. அதனால் அவர்களைத் தெரிவு செய்த மக்களுக்கு விரோதமாகவும் பக்கச் சார்பாகவும் அவர்கள் செயற்படும் போது அவற்றுக்கு எதிராக, அந்த அடாவடித்தனங்களுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுவது இயல்பானதே. அந்த உண்மை நிலை தான் அங்கு உள்ளது என்றுஇளம்பரிதி மேலும் கூறினார்.

(த-5)

# மக்களின் அழைப்பை ஏற்றே நாம் நெடுந்தீவு சென்றோம்

## டக்ளஸ் எம்.பி; பி.பி.ஸிக்கு பேட்டி

(லண்டன்)

நெடுந்தீவில் தமது முகாமை மீள அமைத்துக் கொள்வதற்காக அங்கு சென்றுள்ள ஈ.பி.டி.பியினருக்கு எதிராக பொதுமக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்:

இது தொடர்பாக அக்கட்சியின் செயலாளர் நாயகமும், நாடாளு மன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் பி.பி.சி தமிழோசைக்கு பேட்டி அளித்திருந்தார். அவர் அப்பேட்டியில் தெரிவித்துள்ளதாவது;

புலிகள் நெடுந்தீவு மக்களை விட்டுச் சென்ற காலப்பகுதியில் கஷ்டநிலையில் இருந்த அந்த மக்களின் கோரிக்கையை ஏற்றே நாம் நெடுந்தீவுக்குச் சென்றோம்; அன்று தொடக்கம் அப்பகுதி மக்கள் எங்கள் மீது அன்பும் மதிப்பும் வைத்தவர்களாக இருந்துள்ளனர்;

ஆனால், புரிந்துணர்வுஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர், புலிகள் அங்கு வந்து தமது சுயலாப அரசியலுக்காக மக்களைத் தூண்டி எங்களுக்கெதிரான சில நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்;

நேற்று காலையில் 50 பொது மக்களைத் திரட்டிக் கொண்டு எமது அலுவலகத்தை நோக்கி வந்த அவர்கள் பிஸ்ரலால் சுட்டனர் இதன் பின்னர் தான் பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டை வெடிக்க வைத்தனர்:

எமது கட்சியின் செயற்பாடுகளை புலிகளின் அனுமதியுடன் தான் நாம் செய்ய வேண்டும் என்ற அவசியமில்லை, நாம் மாற்றுக் கருத்துக்கள், கொள்கைகளை வைத்து நீண்டகாலமாக செயற்பட்டு வருகின்றோம்.

ஈ.பி.டி.பியை அரசியல் அரங்கிலிருந்து அப்புறப் படுத்துவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் பல முயற்சிகள் செய்துள்ளனர்: அதிலொரு முயற்சியாகத்தான் இது இருக்கலாம்;

இதனைவிட அண்மையில் யாழ்ப்பாணத்தில் எமக்கு எதிராக பல்வேறு சதி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையை யாவரும் அறிந்துள்ளனர் என்றும் டக்ளஸ் தேவானந்தா அப் பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளார்.

(த-5)

# சமாதான இணைப்புச் செயலக மாவட்ட கிளைகள் வட-கிழக்கில் அமையும்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதான இணைப்பு செயலகத்தின் மாவட்டக் கிளைகள் வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு வெகுவிரைவில் அமைக்கப்படவுள்ளன;

கிளிநொச்சி அரசியல்துறை நடுவப்பணியகத்தில் போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் புலிகள் தரப்பு பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட மட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இதனை தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் அரசியல் துறைப் பொறுப்பாளர் மேலும்தெரிவிக்கையில்; போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் மாவட்ட மட்ட புலிகள் தரப்பு பிரதிநிதிகளும் புலிகளால் நியமிக்கப்படும் மேலும் பலபிரதிநிதிகளுமே இச் சமாதானஇணைப்பு செயலகத்தின் மாவட்டக் கிளைகளில் அங்கம் பெறுவர்;

போர்நிறுத்தக்கண்காணிப்பு குழு பிரதிநிதிகளின் வேலைப்பளு வருங்காலத்தில் அதிகரிக்கும் எனினும், மக்கள் நலனை கருத்தில் கொண்டு அவர்கள் தொடர்ந்தும் செயற்படுவர் என்றநம்பிக்கை உண்டு;

மாவட்ட மட்ட சமாதான செயலகமே அபிவிருத்திபுனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளை கையாளும் எனவும் தெரிவித்துள்ளார்;

இதேவேளை, போர்நிறுத்த கண்காணிப்புகுழுவின்புலிகள் தரப்பு உறுப்பினர், தமதுபல்வேறு கடமைகளை மேற்கொள்வதற்காக அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதெனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது; (உ-8)

## பளை ஆஸ்பத்திரி

# இயங்கும்

(யாழ்ப்பாணம்)

பளை அரசினர் வைத்தியசாலை இன்றுமுதல் இயங்கவுள்ளது;

இதற்கான முன்னேற்பாட்டு உதவிகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கொண்டு வருகிறது; (உ)

## படகு கவிழ்ந்து

# இருவர் உயிரிழப்பு

புலட் சிங்கள மகுறு ஆற்றில் சென்ற பயணிகள் படகு கவிழ்ந்ததில் அதில் பயணம் செய்த இருவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது;

விபத்துக்கு உள்ளான இப்படகில் சிறுவன் உட்பட 6 பயணிகள் பயணம் செய்தனர்.

இவர்களில் சிறுவனும் ஆண்பயணிஒருவரும் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

(உ-8)

பகை நட்பாம் காலம் வருங்கால் முகநட்டு
அகநட்பு ஒரீஇ விடல்.

குறள்

## வலம்புரி

### இறுக்கமான பிடியிது

இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சியென்பது வெறுமனே அரசின் சமாதான வேட்கையென்பதற்கப்பால் பலம் மிக்க சர்வதேச நாடுகளின் அழுத்தம் என்பதையும் ஏற்றுத்தான் ஆகவேண்டும். குறிப்பாக உலகின் பொலிஸ்காரனாக தன்னைக் காட்டிக்கொள்ளும் அமெரிக்காவின் தலையீடும், அழுத்தமும் நிறையவே உண்டு என்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

அமெரிக்கத் தலைநகரங்களான நியூயோர்க், வாஷிங்டன் ஆகியவற்றின் மீது ஒஸாமா பின்லேடன் நடத்திய விமானக் குண்டுத் தாக்குதலின் பின்னர் உலக நாடுகளில் உள்ள தீவிரவாத அமைப்புகளை எப்பாடு பட்டும் ஒடுக்கிவிட வேண்டுமென அமெரிக்கா உறுதிபூண்டதுடன் அதற்கான தனது நடவடிக்கைகளையும் விரிவுபடுத்தியது. ஆயுதங்களையும், இராணுவப் பயிற்சிகளையும் இலங்கைக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் அமெரிக்கா வழங்கியது உறுதிப்படுத்தபபட்ட உண்மை.

ஒரு காலத்தில் அரசுக்கும, தீவிரவாத அமைப்புக்களுக்கும் ஆயுதங்களை வழங்கி அந்நாடுகளில் யுத்தத் தீயை வளர்த்துகுளிர்காய்ந்துகொண்டிருந்த அமெரிக்காவுக்கு தனது தலைநகரங்களில் விழுந்த அடியைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

இதனால் எப்பாடு பட்டும உலக நாடுகளிலுள்ள தீவிரவாத அமைபபுக்களைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் அமெரிக்கா முனைப்புடன் செயற்பட்டு வருகிறது.

அதுமட்டுமன்றி தீவிரவாத அமைப்புக்கள்இயங்குகின்ற நாடுகளின் பாதுகாப்புக்கும் உத்தரவாதம வழங்கித் தனது ஆதிக்கத்தைச் செலுத்துகிறது. அத்தகையதொரு ஆதிக்கத்திற்கு இலங்கையும தப்பவில்லை என்றே கூறவேண்டும்.

இலங்கைக்கு ஆயுதம் மறறும் படையினருக்கு விசேட இராணுவப் பயிற்சி என்ற வகையில் இலங்கையின் இறைமையை அமெரிக்கா தனக்குள் அடக்கிக் கொண்டதால் அந்தப் பிடியிலிருந்து இலங்கை விலக முடியாதென்பதும் அதன் விளைவாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவதும் உறுதியாகிறது.

# பண்பட்ட தோட்டத்தில் போட்ட விதைபோல் நல்ல மனத்தின் எண்ணங்கள் நலன்தருகின்றன

டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி

எண்ணங்களே செயல்களாகப் பரிணமிக்கின்றன. ஒரு விஷயத்தைப் பற்றித் தினமும் யோசித்துக் கொண்டிருந்தோமானால், நாம் அந்த எண்ணத்துடன் பழகத் துவங்கிவிடுவோம், நாளடைவில் அந்த எண்ணத்தில் நியாயம் இருப்பதாகப்படும், 'ஏன் செய்யக் கூடாது? என்ன தவறு?'என்ற எண்ணம் வேர்விடும். நல்ல எண்ணமும் அப்படித்தான், கெட்ட எண்ணங்களும் அப்படித்தான். எண்ணம் ஒரு தீப்பொறிபோல, தீப்பொறி விழுந்ததும் முதலில் கனிகிறது, பின புகைகிறது, பின் 'ஒகோ' என்று எரிகிறது, எண்ணமும் அப்படித்தான்.

### எண்ணப் பழக்கம்

திருடினால் என்ன? என்று எண்ணத்துவங்கும் ஒருமனம் நாளடைவில் திருடுவதற்கான காரணங்களைச் சொல்லிச் சமாதானப் படுத்துகிறது பின் எப்படித்திருடுவது என்று மனிதன் திட்டமிடுகிறான். பின் எங்கே திருடுவது என்று தீர்மானிக்கிறான். நாளடைவில் திருட்டுஎண்ணம் செயலைத் தூண்டுகிறது, மனிதன் திருடனாகிறான், அவன் திருடனானகாரணம்புறச் சூழ்நிலைகள் அல்ல, அவன் மனம்—மனதில் பிறந்த ஓர் எண்ணம், ஒருமுறை திருடியவன் சிறையிலிருந்து வெளியே வந்ததும், எண்ணப் பழக்கம் மீண்டும் அவனைக் குற்றம் செய்யத் தூண்டுகிறது, எண்ணங்கள் வலிமை மிக்கவை. இதேபோலத்தான் பொறாமையும், பிறர்மனை நயக்கும் பேதையர் உள்ளமும், மதுவின் போதையும், எல்லாம் எண்ணம். எண்ணப் பழக்கம் எண்ணம் இலேசாக மனதில் ஊன்றி, பழக்கத்தினால் வலிமைபெற்று, பின் விசுவரூபமெடுக்கின்றது.

திருடன் மகன் திருடமுயலும்போது அவன் என்ன நினைப்பான் என்பதை எண்ணிப்பாருங்கள் என்றார் ஒருமுறை டாக்டர் மு. வ. திருடுவது நியாயம் என்றுதான எண்ணுவான், எண்ணத் தோட்டங்கள் - அங்கிருந்து தான் எருக்கும் கிளம்புகிறது, மல்லிகையும் மலருகிறது.

### மனம் ஒரு தோட்டம்

பண்படுத்தப்படாத தோட்டத்தில் கரம்பும், காளானும் எருக்கும் முளைக்கின்றன. பண்படுத்திச் சரியான விதையிட்ட-செடிநட்ட-தோட்டத்திலிருந்து. மல்லிகையும், முல்லையும், ரோஜாவும் மலர்கின்றன, எண்ணங்கள் விதைகள் அவை காற்றில் மிதக்கின்றன. மனம் ஒரு தோட்டம். நாம் தான் தோட்டக்காரன். என்ன விதையைத் தேர்ந்தெடுக்கிறோம் என்பதுஎன்ன விதமான தோட்டத்தை நாம் விருப்புகிறோம் என்பதைப் பொறுத்தது.

பலர் இனிய மலர்கள் மலர்ந்ததோட்டத்தைவிரும்புவார்கள். அதன் மணமே தனி. பலர் சுவை மிகுந்த பழத்தோட்டத்தை விரும்புவார்கள்-அதன் ருசியே தனி. பலர்சவுக்கு மரம் பயிரிடுவார்கள்- விறகுக்கு பலர் தேக்கும், தேவதாரும் பயிரிடுவார்கள். அவை நீண்டநாள் வாழும், நெடிதுயர்ந்து நிற்கும் காட்சி நெஞ்சை நிறைக்கும்.

நான் பலதேக்கு, வே தாரு மரங்களில் சுவை மிகுந்த கனிகளையும், மணம்நிறைந்த மலர்களையும், வாசம் மிகுந்த சந்தனத்தையும் கண்டிருக்கிறேன் அத்தகைய அசாதாரண அற்புதங்களைகாந்தியாகவும் நேருவாகவும், பாரதியாகவும், அண்ணாவாகவும் கண்டு அதிசயித்ததுண்டு. நம்மிடையே வாழ்ந்த பல தலைவர்கள் என்னை அதிசயத்தில் ஆழ்த்தியிருக்கிறார்கள் திருபதி இந்திரா காந்தியின் துணிச்சல், காமராஜரின் நாணயம், தொழில் மேதை சிகம்பரத்தின் திறமை. நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் நாத உலகச்சிந்தையில் பதியுமுன் கமலா செதுக்கும் சிற்ப நாட்டியம், எம். எஸ். இசைக்கும் தெய்வீகம் என் எண்ணங்கள் உணர்ச்சி வசப்படுகின்றன.

இவைகளைப் பார்க்கும் போது என் உள்ளத்தில் வியப்பும், மலைப்பும், பிரமிப்பும் ஏற்படும். அது கலைந்ததும் நான் பூமிக்கு வருவேன் இத்தகையமகத்தானசாதனை புரியும் திறமைகளைஇவர்கள் எங்கே பெற்றார்கள்? எங்கே கற்றுக்கொண்டார்கள் என்று நானே கேட்டுக் கொள். வேன் சிலசமயம் காந்தியின் சுயசரிதை பேசும். நேருவின் வரலாறு கதை சொல்லும்; சில சமயம் என் சொந்தக் கற்பனை என்னுடன் பேசும். போயும்போயும் ஒரு குக்கிராமத்தில் பிறந்த இவர், பள்ளியில் தேற முடியாமல் திண்டாடிய இவர் இக்கட்டான சம்பவங்களைச் சமாளிக்க முடியாமல் திணறிய இவர் இன்று இத்தனை பெரிய தலைவராய் மேதையாய் எப்படி ஆனார்? என்று உள்ளம் துழாவும்.

பேச்சு மேடையிலிருந்தோ, கச்சேரியிலிருந்தோ சிலசமயம் நினைவுகளை வீட்டுக்கு எடுத்துச் செல்வேன். சிலசமயம் கல்லூரிக்குச் சென்று 'மைக்ராஸ்கோப்' பின் அடியில்வைத்துப் பார்ப்பதுண்டு. சிலசமயம் எனது ரசாயன சோதனைக் கூடத்திற்கு எடுத்துச் சென்று அவற்றைச் சோதனைக் குழாயிலிட்டுக் கலக்கிக் குலுக்கி சூடுபடுத்தி வடிக்க முயல்வதுண்டு.

### அடிப்படைத் துகள்கள்

எல்லாவற்றிலும் எல்லா மேதைகளிடமும் தலைவர்களிடமும் நான்கண்டஅணுத் துகள்- அடிப் படைத்துகள் எண்ணங்கள், எண்ணங்கள்- ஆசைகள், ஆசைகள்- ஒரு துடிப்பு. ஓர் அபூர்வம், வெறி, உழைப்பு அடிப்படைத்துகள்கள் பலநிலையில் சேர்ந்துபல பொருள்களாக இப்பிரபஞ்சத்தை உண்டாக்கியிருப்பது போல, இவர்களது எண்ணங்கள் பல கூட்டுத் தொகுப்பில் மலர்ந்து பரிணமிப்பதைக்கண்டேன்.

எண்ணங்களின் கூட்டுத் தொகுப்பு ஆசையாகவும் நம்பிக்கையாகவும், உழைப்பாகவும் மாறி, மேதை-தலைவன் என்று ஒளிவிடுவதை உலகில் காண்கிறோம். அத்தகையோரால் உலக சரித்திரமேமாற்றி எழுதப்படுகிறது. ஆம்! எண்ணங்கள் உலகைஆள்கின்றன.

கனியைப் பார்க்கும்ஒருவன் அதன் ருசியைச் சுவைக்கிறானே தவிர, விதையைப் பற்றி எண்ணுவதில்லை.

மலரை நுகரும் ஒருவன்அது வளர்ந்த விதத்தைப் பற்றி அக்கறைப்படுவதில்லை. அப்படித்தான் மேதைகளிடம் எண்ணங்களின் முடிவுநிலை கண்டு, நாம் மனதைப்பறி கொடுத்திருக்கிறோம். பல சமயம் 'அதிர்ஷ்டக்காரன்' என்று நமது பொறாமையைத் தெரிவித்துக் கொள்கிறோம். எல்லாம் அப்படி அமைந்தது அவனுக்கு என்று கூறிநமது இயலாமையைச் சமாதானம் செய்து கொள்கிறோம்.

உண்மை இதுவல்ல: அவன் நல்ல-சரியான எண்ணங்களை விதைத்தான். வளர்த்தான். அறுவடைசெய்கிறான். விஷயம் தெரியாதவர்கள் மனம் என்ற தோட்டத்தைப் பற்றியோ, நல்ல விதைகளின்வலிமையைப் பற்றியோ, மனதைப் பண்படுத்தும் முறைகளைப் பற்றியோ தெரிந்து கொண்டதில்லை கேள்விப் பட்டதில்லை சிந்தித்ததில்லை.

### காவல்துறை அலுவலகங்கள் அமைப்பு விவகாரம்

# விடுதலைப் புலிகள் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் பதவியைத் துறப்பேன்

- பாராளுமன்றில் ரவிராஜ் எம். பி. சூளுரை

(கொழும்பு)

யுத்த நிறுத்த ஒப்பந்த மீறல்களை கட்டுப்படுத்துவதற்காகவே, தமிழீழ விடுதலைப் புலிகள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் காவல்துறைப்பணிமனைகளை அமைத்து வருகின்றனர்.

இவ்வாறு உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

உள்துறை அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் ; முன்பைப் போலன்றி கடந்த சில மாதங்களாகயுத்தநிறுத்த ஒப்பந்த மீறல் சம்பவங்கள் குறைவடைந்துள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழீழ காவல்துறைப பணிமனைகளை அமைப்பது குறித்து, நடைபெறவிருக்கும் 3 ஆம் கட்ட பேச்சுக்களின் போது ஆராயப்படவுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இவ் விவாதத்தில் கலந்து கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ் கருத்து தெரிவிக்கையில்;

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினாலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனாலும் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், புலிகள், அரசாங்க கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

இதற்கமையவே தமிழீழ விடுதலைப்புலிகள் தமது கட்டுப்பாட்டு பிரதேசங்களில் பொலிஸ் நிலையங்களை அமைத்து வருகின்றனர்.

விடுதலைப் புலிகள் இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இது வரை பொலிஸ் நிலையங்கள் எதனையும் அமைக்கவில்லை.

அவ்வாறு பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டது உறுதி செய்யப்பட்டால், தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினமா செய்யத் தயார் எனவும் ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

(உ-8)

### தினசரி தியானம்

### உண்மையான சீடன்

குருநாதருடைய கட்டளைகளை எழுத்துக்கு எழுத்து பின்பற்றுகிறவன், சில நாட்களில் குருநாதரைப் போல் ஆகின்றான். குருநாதரின் கட்டளைகளை நிறைவேற்றாமல், தன் விருப்பத்திற்கேற்பச் செயல்படுகிறவன் சீடனாகமாட்டான். குருநாதரின் கட்டளைகளை முழுமையாகவும், ஆர்வத்துடனும் ஏற்று, ஆன்மீகப்பாதையில் தெளிவற்ற மனம் உடையவர்களுக்குத் தன் குருநாதரின் போதனைகளை வாழ்நாளின் இறுதிவரை பரப்புகிறவனே உண்மையான சீடன். அப்படிப்பட்ட பக்தர்கள் இறைவன் அருளைப் பெற்றவர்களாவார்கள்.

சுவாமி சிவானந்தர்.

# ஊனமுற்றோர் தினம் -2002

# கவிதைப் போட்டி

ஊனமுற்றோர் தினத்தை முன்னிட்டு வலம்புரிப் பத்திரிகை நிறுவன அனுசரணையுடன் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தினால் கவிதைப் போட்டி ஒன்று நடதப்பட வுள்ளது.

## இப்போட்டிக்கான நிபந்தனைகள்

- 10 தொடக்கம் 20வரிகளுக்குள் கவிதை அமைய வேண்டும்.
- விடயம்- ஊனமுற்றவர்கள் தொடர்பாக அமைய வேண்டும்.
- வயது வேறுபாடின்றி அனைவரும் பங்குபற்றலாம்.
- பங்குபற்ற விரும்பும் அனைவரும் தமது சுயவிபரத்தையும் இணைத்து அனுப்ப வேண்டும்.
- விண்ணப்பதாரி ஊனமுற்றவராயின் தனது விபரத்தை குறிப்பிட்டு அனுப்பவும்
- கவிதைகள் யாவும் 25.11.2002 இற்கு முன்னர் ஊனமுற்றோர் தின கவிதைப்போட்டி எனக் குறிப்பிட்டு வலம்புரி 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
- முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களிற்கு ரொக்கப் பரிசிலும் சான்றிதழும் மற்றும் 7பேரிற்கு சான்றிதழும் வழங்கப்படும்.
- நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது.

*ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்*

*-செயலாளர்.*

[C/5274]

# UNIVERSITY OF JAFFNA FACULTY OF GRADUATE STUDIES

## M.PHIL. IN BIO CHEMISTRY

Graduate in chemical, biological, medical, dental, veterinary, agricultural and engineering sciences will be considered. Forward application with biodata. All applicants will have to face an interview. Fellowship will be given to the selected candidates. Address the correspondence to Registrar, University of Jaffna.

Closing date 15th of December 2002

**Registrar**
**University of Jaffna**
**2002 - 11 -18**

[C/5280]

## நெடுந்தீவிலிருந்து...

அமைப்புக்களின் பிரதிநிதிகளை யும, ஈ.பி.டி.பியின யாழ் மாவட்ட அமைப்பாளர் ஜெகனையும் சந்தித்து நெடுந்தீவின் தற்போதய சூழ் நிலை தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்தினர்.

சுமுகமான முறையில் நடை பெற்ற இப்பேச்சுவார்த்தையின் பின்னர் நெடுந்தீவை விட்டு வெளியேறுவதற்கு ஈ.பி.டி.பியினர் சம்மதம் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஈ.பி.டி.பியினரின் இந்த வெளியேற்றம் நேற்றைய தினமே இடம் பெறவிருந்த போதும் காலநிலை சீரின்மையால் வெளியேற முடியவில்லை என்றும், இன்று அங்கிருந்து அவர்கள் வெளியேறுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஈ.பி.டி.பியினர் நெடுந்தீவில் தங்கியிருந்த தினங்களில் நெடுந்தீவுக்காண எந்தவிதமான போக்குவரத்துக்களும் இடம் பெறாதநிலையில் அரச நிறுவனங்களின் சகல செயற்பாடுகளும் ஸ்தம்பதம் அடைந்து மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ம.5.43)

## அரசு-புலிகள்......

தகவல் வெளியிட்டுள்ளன.

இந்த உறுதி மொழியைப் பெற்ற பின்ரே வடக்குக்கிழக்குப் புனர் நிர்மாணத்திற்கென வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள நிதி உதவி பற்றிய விபரங்கள் அறிவிக்க வுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

ராஜா

யாழ்ப்பாணம் மூன்றாவது வாரமாக

அஜித் (இரு வேடங்களில்)

மீனா, கிரண் நடித்த



வி ல் ல ன்

காட்சி நேரம்10.30, 2.30, 6.30 (புதிய நேரம்)

விசேட காட்சி: 9.30

# விற்பனையாகின்றன

காஸ் அடுப்பு, றேடியோ, மணிக்கூடு, Blender மற்றும் சகல விதமான மின்சார உபகரணங்களையும் தரமான வகையில், மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஓரே ஸ்தாபனம்

(THE) த பெனின் சுலா குறூப்பின்

ஏக விநியோகஸ்தர ரன

## யாழ் பல்பொருள் வாணிபம்

இல 442, ஆஸ்பத்திரி வீதி

யாழ்ப்பாணம்

T.P - 021-222 2037

[C/5281]

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்

## துன்னாலை வ்டக்கு, புலோலி

# திருப்பாவை ஓதுதற் போட்டி

ஸ்ரீவல்லிபுரஆழ்வார் சுவாமி கோயில் அறங்காவலர் சபை திருப்பாவை ஓதுதற் போட்டி ஒன்றினை நடத்தவுள்ளது. அதன் விபரங்கள்:

1. கீழ்ப் பிரிவு 6ம், 7ம் தர மாணவர்கள்
   மத்திய பிரிவு 8ம், 9ம் தர மாணவர்கள்
   மேற்பிரிவு 10, 11ம் தர மாணவர்கள்
2. திருப்பாவை முதற் பத்துப்பாடல்கள் இசையுடன் பாடுதல் வேண்டும்.
3. விண்ணப்பங்கள் பாடசாலை அதிபர்/ வகுப்பாசிரியர்கள் சிபார்சு செய்தல் வேண்டும்.
4. போட்டி தினம்:- 19.12.2002 காலை 10 மணி
5. விண்ணப்ப முடிவு திகதி:- 18.12.2002


அறங்காவலர் சபை


[C/5279]

# யாழ் மக்களே!!!

## மின்சாரம் இல்லை என்ற கவலையா? கவலையை விடுங்கள்

உலகப்புகழ் பெற்ற LG வழங்கும் பற்றறியிலும் மின்சாரத்திலும் (AC/DC compatible) இயங்கும்





LG

வீடியோ டெக்குகள்     வர்ண தொலைக்காட்சிப் பெட்டி (14")

- நீண்ட நேர ரெக்கோடிங் (Long play Recording)
- துல்லியமான படம் (Crystal Life Picture)
- மல்டி சிஸ்டம் (multi System)
- லைன் ரெக்கோடிங் (Line Recording)

- கோல்டன் ஐ (Gloden Eye)
- சிறுவர்களுக்குரிய விளையாட்டுக்கள் (Games)
- இரண்டு ஒலிபெருக்கிகள் (Two Speakers)
- 100 அலைவரிசைகள் (100 Channels)

என்பவற்றை வாங்கி உங்கள் தேவைக் கேற்பவும் வசதிக்கு ஏற்பவும் பாவியுங்கள். அபான்ஸ் நிறுவனத்தின் உத்தரவாதம் அளிக்கப்பட்ட பொருட்களுக்கு நாடுங்கள்.

**Abans**
498, காலி றோட், கொழும்பு -03.
தொலைபேசி: 565265-79

யாழ் நகரில் எமது அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள்.
யாழ்ப்பாண மின்னகம் (Jaffna Electricals),
94(6) ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
உஷா ஏஜென்சி (Usha Agency),
145, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

இப் பத்திரிகை வலம்புரி அ[illegible] கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.11.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.